உ
கடவுள் துணை.

# வித்தியாபாநு

மதுரையில் பிரசுரமாகும்
ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪ } பரீதாபி௵ ஆவணிமீ { பகுதி ௫.

## எறும்புகள்

எறும்பு ஓர் சின்னஞ் சிறிய ஜந்துவேயெனினும், அதனினும் அதி விசித்திரமானதும், நுண்ணிய அறிவு படைத்ததும், மிகச் சுறுசுறுப்புள்ளதும் பிறிதொன்றில்லை. எறும்பு அநேகமாய் எங்கும் காணப்படும். அதனை மிகுதியாய் உஷ்ணப் பிரதேசங்களிலும் மிகச் சீதளமில்லா இடங்களிலும் காணலாகும்.

எறும்பிற் பலவகை உண்டு. உலகம் முழுவதிலும் எறும்புகளில் 3000 ஜாதிக்கதிகம் உண்டாம். ஆயினும் இந்தியாவில் நூற்றுக்கணக்கான வகைகளும், இங்கிலாந்தில் 30 வகை எறும்புகளுமே உள்ளனவாம்.

எறும்பு பல நிறத்தது. பெரும்பாலார் கண்டுள்ளவை மஞ்சள், கபிலம், சிவப்பு, கறுப்புநிற எறும்புகளே. எறும்புகளைப் பற்றிய உண்மை அறியாதார் கறையானை "வெள்ளையெறும்பு" என்பர்.

உடற் கூறு:—எறும்பின் தேகம் 3 பிரிவுகளுடையது. அவை தலை, மார்பு, அடிவயிறு எனப்படும். எறும்பிற்கு விலாவெலும்புகளுண்டு. சிலந்திக்குள்ளதுபோல் எறும்பிற்கும் பல நூறு கண்களுண்டு. ஆயினும் அவையாவும் திரண்டு இரண்டு கண்களாய் அமைந்துள்ளன என்று அறிஞர் கண்டுபிடித்திருக்கின்றனர். அதற்கு நுண்ணிய கட்புலன் உண்டு. நமக்குக் கை உதவுவதுபோல எறும்புக்குத் தும்பிகள் உதவுகின்றன. இத்தும்பிகள் எறும்பின

தலையில் உள்ளன. "ஸ்பரிசனி" யாகிய இவற்றின் உதவியால்தான் எறும்புகள் பரஸ்பரம் தமது எண்ணத்தை அறிவித்துக்கொள்ளும்.

மூவகை எறும்புகள்:—எறும்புப் புற்றொன்றைச் சோதித்துச் சோதித்தால் அதில் மூன்றுவகை எறும்புகள் இருக்கக் காணலாம். அவை ஆண், பெண் அலி ஆகும். "அலி" எறும்புகள் என்பன பிறக்கும் பொழுதே அவ்வாறு பிறந்தவை அல்ல. அவை ஆணுகவோ பெண்ணுகவோ பிறந்தவைகளே. ஆயினும் ஏனைய எறும்புகளால் பிறந்தவுடன் அத்தன்மைகள் போககப்பட்டவைகளாம்

அலியில் இருவகை உண்டு. அவை "சிப்பாய்"கள் (Soldiers) என்றும்," வேலைக்காரர்கள்" (Workers) என்றும் பெயர்பெறும். எறும்புக்கூட்டில் பெரும்பாலும் காணப்படுபவை வேலைக்கார எறும்புகளே. சிப்பாய்கள் வேலைக்காரரினும் சற்று உருவத்திற் பெரியன. ஆண் பெண் இவற்றின் தொகை சொற்பமே. ஆண், பெண்ணினும் உருவத்திற் சிறிதா யிருக்கும். ஆணுக்கும் பெண்ணுக்கும் பளபளப்பான மெல்லிய இறகுகள் உண்டு. அலிகளுக் கிறகு இல்லை.

ஆணும் பெண்ணும் சந்ததி அபிவிருத்தி செய்யவே பிறந்தவை. கூடு கட்டுவதும், குஞ்சு, முட்டை முதலியவற்றை உரிய இடங்களில் வைத்து அடிக்கடி சூரிய வெளிச்சத்திற் கொண்டு போய்ச் சுத்தப் படுத்துவதும், அவை பூரண பக்குவமுற்றவுடன் கூட்டைக் கிழித்து அவற்றை வெளியேற்றுவதும், அவை தாமாக இரைதேடப் பழகும்வரை உடன் சென்று அவற்றைக் காத்துப் போஷிப்பதும், புற்றுவாசிகளுக் கிரையளிப்பதும் இவைபோன்ற பிறவும் வேலைக்காரரின் தொழில்களாம்.

கூட்டையும் புற்று வாசிகளையும் ஆகாராதிகளையும் காத்துப் பகைவரைத் துரத்தப் போர்புரிவது சிப்பாய்களின் தொழில். சிப்பாய்களுக்கு முன்பின் அசையக்கூடிய உறுதியான அலகுகள் உண்டு. அவை குறடுபோலவும், கத்தரிபோலவும், குந்தாலிபோலவும், வாள் போலவும் அவைகட்கு உதவும். சிப்பாய்கள் தம் சத்துருவை அலகுகளாற் கடிக்கும்போது கடிவாயில் புளிப்புள்ள ஓர் நீரைக் கக்கும். இதனால் வலியிற குறைந்த சத்துருக்கள் சாகவும் வலிமிகுத்தவை நோயுறவும் நேரும். நிற்க. எறும்புகளில் அற்பாயுசுள்ளன ஆண்களே. "இராணி எறும்பு"என்னும் பெண் எறும்பும் வேலைக்கார எறும்புகளும் அநேக வருஷம் பிழைத்திருக்கும்.

முட்டை:—இது ஆரம்பத்தில் வெறுங் கண்ணுக்குப் புலப்படாத அவ்வளவு நுண்ணிய உருவுடனிருக்கும். பிறகு அது மஞ்சள் அல்லது வெளிர்மஞ்சள் நிறத்துடன் காணப்படும். சின்னாட்களில் இம்முட்டைகள் சின்னஞ்சிறு புழுக்களாகும். அப்பொழுது அவை அரிசிக் குறுநொய் போன்றுவது கோதுமை மணி போன்றுவது இருக்கும். மனிதரும் அதனைச் சிலவேளைகளில் முட்டைகளெனக் கண்டுகொள்ள மாட்டாமல் ஏமாந்துபோய் விடுவதுண்டு. ஆயினும் கோழிக்குலம் மட்டும் ஏமாறா. இயற்கையிலேயே இவை இன்ன என அவை கண்டுகொண்டு அவற்றைக் கொத்தித் தின்ன ஆரம்பித்து விடும். இப்புழுக்கள் வேலைக்கார எறும்புகளால் நன்கு போஷிக்கப்படும். பிறகு சில காலம் இவை இரை யுண்ணுமற் கிடந்து தாமே நூற்கும் மெல்லிய நூற்போர்வையில் தம்மைச் சுற்றிக்கொண்டு "கூண்டுப்புழு" எனப் பெயர்பெற்றுச் சிலகாலம் உயிரற்றன போற் கிடக்கும். இவ்வாறான சில நாட்களுக்குப் பின்னர்தான் அவை சரியான எறும்புருக் கொள்ளும். ஆகவே முட்டைகளைக் குஞ்சுபொரிக்க நாள் 15ஆவது ஆகும்.

வாசஸ்தலம்:—சிலவகை எறும்புகள் கூடுகட்டியும், சில, பெரிய கற்களின்கீழ் வளை தோண்டியும், சில, பழு மரங்களின் அடியைத் துளைத்தும், சில, இலைகளை ஒன்றோடொன்றொட்டிக் கூடாக்கியும், சில, பூமிக்குமேல் புற்றெழுப்பியும் வசிக்கும். உஷ்ண தேசங்களில் எறும்புகள் சிறு குன்றுகள்போல் புற்றெழுப்பும். இவை கட்டிய திட்டுகள் சில இடங்களில் 15 அடி உயரத்திற்கும் அதிகமாக இருக்கின்றன. இத்தகைய புற்றுக்களை மிக்க உஷ்ணபூமியாகிய ஆபிரிகாவில் காணலாம். கிராமாந்தரங்களில் 5 அடி வரையில் நம் நாட்டிலேயே அவற்றைக் காணலாகும். எறும்பின் வசிப்பிடம் அதி அற்புதமாக அமைக்கப்பட்டதாகும். எறும்புகள் உலவவும், குஞ்சுபொரிக்கவும், அவற்றை வளர்க்கவும், உணவை உணவும், மழையால் நாசமுறாதபடி தம்புற்றைக் காப்பாற்றப்போதிய மரச்சக்கை வைக்கோற்றுணுக்கு, சிறு கற்கள் முதலியன வைக்கவும் தம் பசுக்களும் அவற்றின் குழந்தைகளும் இருக்கவும் நானாவிதமாய் நானாவித அளவிற் கட்டப்பட்ட அறைகள் பல அவை கட்டும். அவை அடுக்கடுக்காகப் பூமிக்கு அடியிலும் நில மட்டத்திற்கு மேலும் வெகு சித்திரமாய்ச் செய்யப்பட்டிருக்கும்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

# ஆன்மாக்களும் முத்தியும்.

தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தயபிள்ளையவர்களெழுதிய "தசகாரிய விளக்க"த்திற் கூறப்பட்ட சில விஷயங்களின் மறுப்பாக ஸ்ரீ தெ. ச. சுப்பிரமணியபிள்ளையவர்கள் வெளியிட்ட 'சர்வான்மாக்களும் முத்தியைச் சார்ந்தே விடும்,' என்ற புத்தகமும், அதற்கு மறுப்பாக ஸ்ரீ பொ. முத்தயபிள்ளையவர்களெழுதிய "மறுப்புக்கு மறுப்பு" என்ற புத்தகமும் நமது பார்வைக்கு வந்தன. இவற்றை எழுதிய இருவரும் இப்புத்தகங்களை எமக்கனுப்பி எம் அபிப்பிராயத்தை வெளியிடுமாறு லிகித மனுப்பியுள்ளார்கள். முன்னமே தசகாரிய விளக்கத்தையும் பார்த்துள்ளோம். எமது நண்பர்களாகிய இவ்விருவரும் விரும்பியவண்ணம் இப்புத்தகங்களை ஆராய்ந்த மட்டில் யாங்கொண்ட அபிப்பிராயத்தை நமது பாநு வாயிலாகவே வெளியிடுகின்றோம். நண்பர் இருவரும் கண்டுகொள்வார்களாக.

(1) எல்லா ஆன்மாக்களும் ஒருகாலத்தில் முத்தியை யடையும். அதாவது பெத்தான்மாக்களே யில்லாதொழியும்.

(2) மலம் இறுதியில் இறைவனிடத்தே யடங்கும்.

(3) தடத்தசிவத்துக்குச் சுத்தமாயையிற் றிருமேனியில்லை.

என்னுமிவை தெ. ச. சுப்பிரமணியபிள்ளை யவர்கள் கருத்தாம். இவற்றின் மறுதலையாக ஆன்மாக்கள் எத்தனைகாலம் முத்தியையடைந்துகொண்டே வரினும் பெத்தான்மாக்கள் இல்லாதொழியா; மலம் இறைவனிடத்தில் அடங்காது. தடத்த சிவத்துக்கு சுத்தமாயையிற் றிருமேனியுண்டு என்னு மிவை பொ. முத்தயபிள்ளை யவர்கள் கருத்தாம்.

இவைகளைப்பற்றி எமது அபிப்பிராயத்தைக் கூறுதும்:— மதசம்பந்தமான உண்மை விசாரத்திற் றலைப்பட்டு யாதானுமொன்றைப்பற்றி ஒருவித முடிவுக்கு வரவேண்டுமாயின் அந்த மதத்துக்குரிய சாத்திரங்களையும் பூர்வாசிரியர் கருத்துக்களையும் தழுவி அவற்றுக்கு மாறுபடாவண்ணம் தத்தம் மதிநுட்பத்தைக்கொண்டு சித்தாந்தஞ் செய்தல்தான் முறையாகும். அற்றன்றி சாத்திரங்

களையும் பூர்வாசிரியர் கருத்துக்களையும் புறம்பாக்கி நெகிழவிட்டுத் தங்கள் தங்கள் மதிநுட்பத்தையே சால மதித்து நவீன கற்பித வாதத்திற் றலைப்படல் பயனில் செயலேயல்லது பிறிதின்று. சைவ சித்தாந்தப் பற்றுடைய பிள்ளையவர்க ளிருவரும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் பண்டை ஆசிரியர் கருத்துக்களையும் தழுவி அவற்றுக்கு முரண்படாவண்ணம் தத்தம் மதிநுட்பந் தோன்ற வாதித்துச் சாதித்தலே பொருத்தமுடையதும் சித்தாந்தஞ் செய்யப் பெறுவதுமாகும். இவ்வரம்பிற்கு இருவருங் கட்டுப்படுங் கடப்பாடுடையரே யாவர்.

சாத்திரங்களும் ஆசிரியர்களும் ஆன்மாக்கள் அநாதியென்றும், அளவில்லனவென்றுங் கூறியுள்ளார்கள். ஆதியில்லாதவற்றிற்கு அந்தங் கூறல் பொருந்தாது. பெத்தான்மாக்களெல்லாம் காலாந்தரத்தில் ஒருசேர முத்தியடைந்து இல்லாதொழியுமென்றால் அநாதியென்றற் கிழுக்காகும். அளவில்லனவென்று எல்லாருங் கூறியிருப்பவும் கட்டுத்தொகையென்ற ஓரளவுக் குட்படுத்தி முத்தி சேரச் சேர இருப்புத்திட்டம் குறையுமென்றலும் பொருந்தாது. கட்டுத்தொகைக் குட்படுத்தமுடியாதென்பது தோன்ற அளவில்லன என்று வரையறுத்து யாவருங் கூறியிருப்பவும், நாம் கட்டுத்தொகை கற்பித்தல் முரணும். காலம் என்பது என்றுமுள்ளதாக அறிகிறோம். இறந்தகாலம் கழிந்துகொண்டே வருகிறது. இங்ஙனம் கழிந்து கொண்டேவருதல்பற்றி வரவரக்கழிந்து கழிந்து காலமென்பதேயில்லாமற்போகுமென்பாருண்டோ? அல்லது காலம் புதிதாகத் தோன்றுமென்னலாமோ? புதிதாகத் தோன்றாமலும் கழிந்து வருதலால் ஒழியாமலும் காலம் என்பது இருத்தல்போலவே ஆன்மாக்களும் அநாதியாயும், முத்திபெய்தலால் அறவே யொழியாமலும் என்றும் குறைவின்றி யிருக்குமென்பதே ஆன்றோர் கொள்கையாம். இக்கருத்தையே திருவருட்பயன் நூலாசிரியரும்,

"பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை"

எனக்கற்பித்தருள் வாராயினர். அன்றியும் பெத்தான் மாக்களே யில்லாதொழியின் பிரபஞ்சமும் பஞ்சகிருத்தியமு மில்லையாம். இங்ஙனம் ஒன்றுமற்ற சூன்ய நிலையைக் கற்பிதம் செய்தல் சாஸ்திர சம்மதமுமில்லை. பூர்வாசிரியர் கருத்துமில்லை. யுக்திக்கும் பொருத்தமில்லை. ஆகவே ஆன்மாக்கள் அநாதி யென்றும் அளவில்லனவென்றும் ஆன்றோர் கருத்துப்படி யாமுங் கோடலே மரபாகும்.

இனி "மலம் இறுதியில் இறைவனிலடங்குமா" என்பது:— இறைவனைப்பற்றிக் கூறுமிடமெல்லாம் நிமலன், அமலன், விமலன் என்பன வாதியவாக மலரகிதன் என்றே கூறக்காண்கின்றும்...... ........."நீக்க நீங்கி விமலனிடங்கும்" என்ற விடத்து நீக்க— இறைவன் நீக்க. நீங்கி-மலத்தினின்று நீங்கி. விமலனிலடங்கும்- மலரகிதனாகிய இறைவனிடத்தே ஆன்மா அடங்கும். என்பதே பொருளாம். அடங்குதல் வினைக்குக் கருத்தா ஆன்மா வென்பது முன்னை மூன்றடிகளாலும் பெறப்படும். அன்றியும் இவ்விடத்து விமலன் என்ற சொல்லைப் பெய்திருத்தலும் இக் கருத்தையே வலியுறுத்துவதாம். ஆகவே மலம் இறைவனிலடங் கும் என்றல் பொருந்தாது.

இனி "தடத்தசிவத்துக்குச் சுத்தமாயையிற் றிருமேனியுண் டா"வென்பது:—தடத்த சிவத்துக்குச் சுத்தமாயையிற் றிருமேனி யுண்டென்பது பண்டை நூலாசிரியர் உரையாசிரியர் பலருக்கும் கருத்தாதலை ஸ்ரீ பொ முத்தயபிள்ளையவர்கள் நன்கு விளக்கி யுள்ளார்கள். ஆனால், திருவானைக்காப் புராணத்தில் ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்

"மாயை சுத்தமே யசுத்தமே யெனவிரு வகையாம்
ஆய மாயைக ளிரண்டுமெய் யறிவுரு வல்லால்
தோயு ருதநம் மருளினாற் றெழிலுற்ற ருயிர்க்கு
மேய சீர்த்தநு வாதிக ளுன்குமாய் விரியும்"

என்ற பாசுரத்தினால் சுத்தமாயை அசுத்தமாயை யிரண்டி லும் உயிர்கட்கு தநுகரணாதிவருமெனக் கட்டளை யிட்டருளி யிருத்தலால் தடத்த சிவத்துக்குச் சுத்தமாயையிற் றிருமேனி யுண்டென்றல் முரணுமாலோ எனின், முரணாது. என்னை? சுத்த மாயை அசுத்தமாயை இரண்டிலும் உயிர்கட்குத் தநுகரணாதி

வருமென்றதற்குப் பொருள் கொள்ளுங்கால் சுத்தமாயையில் விஞ்ஞானகலர், பிரளயாகலர் சரியை கிரியை யோகானுட்டானிகளாகிய உயிர்கட்குத் தநுகரணாதிகள் வருமெனவும் அசுத்தமாயையில் சகலர்க்குத்தநுகரணாதிகள் வருமெனவும் கொள்ளவேண்டும். இங்கே சிவபிரான் அம்பிகைக்கு உபதேசிக்கும் சந்தர்ப்பமாதலின் "அறிவுருவல்லாற்றேருயுருத்தநம்" என சொரூப சிவத்திற்கு அறிவே யுருவாதலை விளக்கி யருளியவாறுமாம். ஆதலின் இறைவனுக்கு அறிவேயுருவாதலன்றிச் சுத்தமாயையிற் றிருமேனி இல்லையெனக் கூறியதாகக்கொண்டு மலையற்க. தடத்தசிவத்துக்குச் சுத்தமாயையிற் றிருமேனியுண்டெனக் கொள்க. சொரூப சிவம் தடத்த சிவம் இரண்டனையும் ஒன்றெனக் கொண்டு முன் பின் முரண இடர்ப்படலொழிக. இத்திருப் பாசுரத்துக்கு இதுதான் இங்குப் பொருளென்பது அடியில் வரும் திருப்பாசுரங்களால் அங்கை நெல்லி போற்றேன்று மாறு காண்க. திருவானைக்காப் புராணமியற்றிய ஸ்ரீ கச்சியப்பமுனிவர் பெருமானே தாமியற்றிய தணிகைப் புராணத்தில் மாயையை விரித்துணர்த்து மிடத்து

"மாயை யிரண்டு திறனுகுஞ் சுத்த மசுத்த மெனமாதோ"
"மேதகு சிவமே சத்தியே நாதம் விந்துவே சதாசிவ மகேச
பேதமே யரனென் றிவர்க்கும்விஞ் ஞான கலரொடு பிரளயா கலர்க்கும்
தீதறு சரியை கிரியையோ கத்திற் செறிந்தவர் தமக்குநற் றனுக்கள்
ஓதுறு கரண புவனபோ கமுமைங் கலையுமற் றுயிர்ப்பது சுத்தம்"
"மாலயன் வலாரி தேவர்கண் முதலா மன்னிய சகலருக் கெல்லாம்
கோலநற் றனுக்க ளாதிய நான்கும் கொடுப்பதா லசுத்தமா மாயை"

எனக் கட்டளை யிட்டருளியுள்ளார். இவ்விருபுராணமும் ஒருவர் திருவாக்கே யாதலின் முன்னது சூத்திரம் போலவும் பின்னது பாடியம் போலவும் உய்த்துணர்வார்க்கு எளிது புலனும். இதனுல் தடத்த சிவத்துக்குச் சுத்தமாயையிற் றிருமேனி யுண்டென்று பூர்வாசிரியர்கள் கருத்துக்கு மாறுபடாமல் கொள்ள வேண்டு மென்பதே பெறப்படுகின்றது.

எமது நண்பர்கள் வேண்டுகோளின்படி எமது அபிப்பிராயத்தை ஒருவாறு வெளியிட்டு முடித்தாம்.

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்

பத்திராதிபர்.

# *குருபக்தி.

குருபக்தி யென்பது குரு + பக்தி யென்னும் இருமொழிகள் சேர்ந்த ஒரு தொடர்மொழி. முன்னையது கு + ரு எனப் பிரியும். கு-இருள்: ரு. நீக்குதல். ஆகவே அஞ்ஞானமாகிய இருளை நீக்குதல் காரணமாக அத்தகையார் குருவெனப்படுகின்றார். அவரிடத்தில் அன்பு செய்தல் பக்தி. இருளை நீக்குதல் சூரியனுக்கே கூடும். அச்சூரியன் நேராகவும் சந்திரன் முதலிய கோள்களை அதிட்டித்தும் இருளை நீக்குதல் கூடும். அதிட்டித்து நீக்குவதில் இருள் அறவே நீங்குவதில்லை. அதிட்டிக்கப்படும் பொருள்களுக்கேற்பச் சிறிது சிறிது நீங்கும். நேரே நீக்குவதில்தான் அறவே நீங்கும். இதுபோல அஞ்ஞானத்தை நீக்குவதற்குரிய குரு கடவுளே. அவர் வித்தியாகுரு, சமயகுரு வென இருதிறப்படுவர். வித்தியாகுரு நெடுங்கணக்கு முதல் ஞான சாத்திரம் மீறாகக் கற்பிப்பவர். இவற்றால் அஞ்ஞானம் சிறிது சிறிது நீங்கும். இவ்வாறு கற்பிப்பவரிடத்தில் கடவுள் அதிட்டித்து நிற்கின்றார். அதிட்டித்தல் அதிட்டிக்கப்படுபவனுக்குத் தெரியாது அவனுள் மறைந்து நிற்றல், சமயகுரு ஞானோபதேசத்தால் அஞ்ஞானத்தை அறவே நீக்குபவர். இவரிடத்தில் கடவுள் ஆவேசமாய் நிற்கின்றார். ஆவேசித்தல் ஆவேசிக்கப்படுவரிடத்து வெளிப்பட்டு நிற்றல். இவரும் சமயகுரு சந்தான குருவென இருதிறப் படுவர். ஒவ்வொரு அவசரமான காலங்களில் தோன்றி உண்மையை யுணர்த்தி மறைபவர் சமயகுருவாவர். பரம்பரையாய் ஒருவர் பின் ஒருவராய் உபதேசித்து வருபவர் சந்தான குருவாவர். சமயகுரு திருஞானசம்பந்தசுவாமிகள் முதலிய நால்வர்களாம். சந்தான குரு மெய்கண்டதேவர் முதலிய நால்வர்களாம். இவருள் மெய்கண்டதேவர் அருணந்திசிவாசாரியர் மறைஞான தேசிகர் ஆகிய மூன்று குரு பீடமும் திருவாவடுதுறை யாதீனத்தி லிருப்பதாலும், உமாபதி சிவாசாரியர் குருபீடம் இப்பொழுது வீரசைவரிடத்தி லிருப்பினும் திருவாவடுதுறை யாதீனத்தாரால் ஒரு சமயத்தில் வீரசைவரிடம் விட நேர்ந்தாலும் திருவாவடுதுறை யாதீனம் சந்தானகுரு பரம்பரை யெனப் பெறும். அவ்வாதீனத்தி லெழுந்தருளி யிருக்குங் குருமூர்த்தி சந்தானகுருவாவர். குற்றத்தைத் தானும் நீக்கித்தன்னை யடைந்தார்க்கும் நீக்குதலின் ஆசிரியரெனவும், ஞானசொரூபியாய்த்தான் பிரகாசித்துக்கொண்டு தன்னை யடைந்தாரைப் பிரகாசிக்கச் செய்தலின் தேசிகரென்றும, விதியைத் தானும் ஆசரித்து தன்னை யடைந்தாரை ஆசரிக்கும்படி செய்தலால் ஆசாரியரென்றும குருவின் பரியாய நாமங்களாகும். இனி பக்தி எனப்படுவது செயல்வழியாகக் காட்டப்படுவது. செயல, பாதுகாத்தல் பணி செய்த லென இருதிறனும். பாதுகாத்தல் உடலுக் குயிர்போலும் கண்ணுக் கிமைபோலும் குருவின் திருமேனிக்குத் துன்பம் வராமற் காத்தல். பணிசெய்தல் ஊசியின் பின்செல்லும் நூல்போல், புலியைப் பிடிக்கும்படிக்கும் தீயில் விழும்படிக்கும் எவினும் ஐயுறாது செய்தல். பக்திசெய்வதால் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாத மெய்தி ஞானோபதேசம் பெற்று அஞ்ஞானம் அறவே நீங்கிப் பேரின்பம் பெறுதல் கூடும். ஆகவே பேரின்பத்தை விரும்புவார் யாவரும் குருபத்தியுடையராக வேண்டுமென்பதே முடிந்த பொருளாம் என்பவும் பிரவமாம்.

நல்லகுற்றாலம்பிள்ளை.

---

* இது ஸ்ரீ பொ. மு. முத்தையபிள்ளையவர்கள் மதுரைக் காலேஜில் செய்த ஓர் பிரசங்கத்தின் சாராம்சமாகும்.

பொன்னுடையான் மிக்க புகழுடையான் பூவமரும்
மின்னுடையான் பூவமரும் மின்னுடையான்—மன்னன்
பதியுடையான் மேலவர்செய் பாவுடையான் ஓங்குங்
கதிரேச னென்னுங் கவி.

ஸ்ரீமான் கதிரேசச் செட்டியாரவர்கள் ஸமூகத்திற்கு. என்னால் முற்றும் சீர்திருத்தமுடியவில்லை. மூத்தமையின். இச்சமயம் இவடத்தில் ஸகாயம் செய்யும் விவேகிகளில்லை. ஆதலின் எழுத்தின் பிழை தளையின்பிழை உவமானப் பிழை இவைகளை நன்றாய்வது மிகவும் அவசியம். ஆராய்ந்தபின் தள்ளுவன தள்ளி கொள்வன கொள்க.

இங்ஙனம் உத்திரவின்படி
தங்கள் நண்பன்,
· மாதவன். என்பதே.

பிழை யனைத்தும் நீக்கித்தரவேண்டுமென்று ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்களைப் பிரார்த்தித்து எழுதும் வெண்பாவும் பிழைபட்டுளது. எங்ஙனே? முதல் வெண்பா முதலடியில் கிறைவன் என்ற மாச்சீருக்குமுன் மா எனக்காய்ச்சீர்வந்து ஆசிரியத் தளையாயிற்று. இங்ஙனம் பிழைத்தல் மிகவும் நாணற்பாற்றேயாம். இவற்றைக் கண்ணுற்ற ஸ்ரீமத் கதிரேசச் செட்டியாரவர்கள் இவ்வழுப் பொக்கிஷத்தைப் புதுக்கப் புகுதலினும் புதுக்கவி பாடிக் கொடுத்திடல் சுலபமெனக் கருதி வாளாவிருந்தனர். இங்ஙனம் வீமகவியாரியற்றிய வழுக்குவையாகிய நீதிவழி யென்னும் கையெழுத்துப் புத்தகம் சன்மார்க்க சபைப் புத்தகசாலையில் இன்றுமுளது. யாம் இதனை யொருமுறை பார்த்தமட்டிற் றோன்றிய சொற்குற்றம் பொருட்குற்றம் தளைக்குற்றம் ஆகிய பலவற்றுட் சிலவற்றை யிவண் காட்டுதும்.

(1) 4-வது கவி "நற்குலத்தி லேபிறந்த நாரிதனை யேமணஞ்செய்
தற்புற் றிருவ ரமைந்தொழுகி—யிற்புக்க
மேலோர்க ளின்பத்தை மேவுவார் தந்தலையாம்
வானோர்க்கு நல்விருந்தா வை" இவ்வெண்பாவில்

மேலோர்களென்பது எழுவாய். மணஞ் செய்து ஒழுகி மேவுவார் என வினை முடிவுபெறும். இவற்றுக் கிடையில்வந்த இருவர் என்பதற்கு முடிவிடம் யாது? இருவரென்பதே எழுவாயாயின் நாரியை மணஞ்செய்தார் யாவர்? ஆகவே இருவர் என்னும் சொல்லை யிழுத்துச் சந்தியில் விட்டுப் பயனில்லை பயனில்லை என்று கதறுமாறு வைத்தனர்.

(2) 7-வது கவி. "கொடிநன் மலர்தனைக் கொம்பர் கெழுங்கனியை விடினவரே கண்டுவெப்பர் மேல்" இதில் கெழுங் கனியை என்ற காய்ச்சீர்முன் விடி என நிரைவந்து கலித்தளை யாயிற்று.

(3) 10-வது கவி. "நல்லாராய் மேன்மையிடை நண்ணுமொரு மேலவ யல்லாராய்ச் செய்துவிட லாகுமோ.—......" [ரை இதில் அல்லாராய் என்பதிலுள்ள ஆதல் வினைக்குக் கருத்தா இல்லையே. இஃதொன்றே 45-வது கவியில் "இடரா யோது" என்கின்றார். இங்கும் ஆதல் வினைக்குக் கருத்தா இல்லை. இவற்றை ஆகவென்னும் பொருள் தருமாறு அல்லாராச் செய்துவிடல் எனவும் இடராவோது எனவும் கூற லாகாதா? ஐயோ பாவம்! ஆய் எனற்கும் ஆக எனற்குமுள்ள பொருட் பேத நிலையை யறிந்திலர்.

(4) 22-வது கவி. "நினைவினரே நம்பியய னிற்போரு மேனோக்கும் பனைநிழலை நம்பினவர் பார்" இக்கவியில் மேனோக் கும் என்னும் காய்ச்சீர்முன் பனை யென நிரைவந்து கலித்தளை யாயிற்று.

(5) 26-வது கவி.

"காரியத்திற் கோபத்தைக் கைக்கொண்டோர் மேலோர்வீண்
காரியத்திற் கோபத்தைக் கைக்கொண்டோர்—நாரியரே
பங்கமுறு மூர்க்கராம் பாருலகின் மேன்மைசேர்
சிங்கத்தை நாயதனைத்தே—" இதில் நாரியரே எனப் பன்மைச்சொல் லால் விளித்தற் கேற்ப தேர்மின் எனக்கூறவேண்டும். இஃதறியாது தேர் என ஒருமையிற் கூறியுள்ளார். இதனால் ஒருமை பன்மை வேறுபாடறி யாமை பொள்ளெனப் புலப்படுகின்றது.

(6) 29-வது கவி. "கல்லா வொருவன் கற்றவனைப் போனடிக்கிற் செல்லா வுலகஞ் சிரிக்குமே" இதில் ஒருவன் என் னும் மாச்சீர் முன் கற் என நேர்வந்து ஆசிரியத் தளையாயிற்று. இதனால் இக் கவியின் பொருள் ஆக்கியோரை நன்கு வெளிப்படுத்துவது மாயிற்று.

(7) 36-வது கவி. "மடமைக் கிடனு மடைத்தொழிலி னூரும் புடவினால் சற்கப் புகுதி—னிடமகன்ற" இதில் புகுதின் எனஓர் புதுமொழிப் பிரயோகங் காணப்படுகின்றது. புகின் என் றிருக்கவேண்டும். புகுதின் என்றிருத்தல் பிழையேயாம்.

(8) 48-வது கவி. "சொல்லா துணர்வான் றூக்கி வினைசெய்வான்," இதில் துணர்வான் என்னும் மாச்சீர்முன் தூக் என நேர்வந்து ஆசிரியத் தளையாயிற்று.

(9) 50-வது கவி. "உலகங் குறைகூற வுள்ளதனை யுந்துலைத்தே
யலகைபோ லேயலையு மே" இதில் யுந்துலைத்தே என்னும் காய்ச்சீர் முன் யல என நிரைவந்து கலித்தளையாயிற்று. தொலைத்தல் என்னும் சொன்னிலை யறியாது துலைத்தே எனப் பிரயோகித்துள்ளார். சிற்றிலக்கியப் பயிற்சியாவது முறையாகச் செய்திருப்பின் இத்தகைய சொற்பாகுபாடு தெற்றெனத் தெரியுமே.

(10) 56-வது கவி.

"இரப்பார்க்கொன் றீயாமற் போற்றும் பெருஞ்செல்வம்
பரக்கு முவர்க்கடல்போற் பன்னுவாம்—நரர்க்குக்
கரக்கா தருளுங் கருணையான் செல்வம்
சுரக்குஞ்சிற் றூறலெனச் சொல்" இதில் பெருஞ்செல்வம் என்னும் காய்ச்சீர்முன் பரக் என நிரை வந்து கலித்தளையாயிற்று பன்னுவாம் என்னும் காய்ச்சீர் முன்னும் நரர் என நிரைவந்து கலித்தளையாயிற்று. பன்னுவாம் என்பதை விளச்சீராகக் கொள்ளினும் நிரைவருதல் பிழையே. இங்ஙனம் இரண்டடிகளிலும் இரண்டு தளை மாட்டிக்கொள்ள நடைபெறுங் கவியை யிதுகாறுங் கண்டிலம்.

(11) 57-வது கவி.

"பிரன்மனையை யிச்சித்துப் பின்றொடர்ந்து செல்லும்
நரனே யொருசொ னவிலக்கேள்—நின்மனையை
மாற்றா னொருவன் மரைந்தணையக் காணுன்
மனமகிழு மோசொன் மதித்து." இக்கவியின் எதுகை மோனை பொருள் முதலிய எல்லாம் எவ்வளவு அழகாக அமைந்துள்ளன வென்பதை அறிவுடையார் அறிந்து நகையாடாமற் போகார். பிரன்எனவும் மரைந்தெனவும் வல்லின இடையின றகர ரகர பேதமுணராமற் பிரயோகித்தல் மிகப்பெரிய தோரிழுக்காம். மரைந்தென்பது எழுத்துப் பிழையெனக் கூறுவரேல் பிரன் என்பது எதுகையில் நிற்பதால் ஈரிடத்தும் தப்பியோட வழியில்லை.

(12) 61-வது கவி. "பழுத்தொழுகி நின்று பரந்திடினும்
வழுத்திடினே" இதில் பரந்திடினும் என்னும் காய்ச்சீர் முன் வழுத் என நிரைவந்து கலித்தளையாயிற்று.

(13) 66-வது கவி. "பேயுமொரு வன்பாலன்பு வைக்குமே—தூய" இதில் வன்பாலன்பு எனக் கனிச்சீர் வந்தது பெரும்பிழையாகும். அற்றன்று. வன்பாலன் புவைக்குமே எனக் கண்ணழித்துக் காய்ச்சீராக் கொடுமெனின் வன்பாலன் என்னும் காய்ச்சீர் முன்பு வைக் எனநிரைவந்து கலித்தளையாயிற்று. ஆகவே இக்கவி சீர்கெட்டது, அல்லது தளைபட்டது என்பது சிறியாருமுணரற்பாற்றும்.

(14) 70-வது கவி. "முன்னிற்கு மன்றி முற்றும் நிலைபெறு." இதில் மன்றியென்னும் மாச்சீர்முன் முற் என நேர்வந்து ஆசிரியத்தளை யாயிற்று.

(15) 71-வது கவி. "நட்படைந்த பின்னர் நாளுக்கு நாட் பெருகி" இதினும் பின்னர் என்னும் மாச்சீர்முன் நா என நேர்வந்து ஆசிரியத் தளை யாயிற்று.

ஐயா வீமகவியாரே! யாம் மேலெடுத்துக் காட்டிய நுமது கவிகளின் பிழைகட்கு நீரே சமாதானங் கூறி அவற்றைப் பரிகரிக்க வேண்டும். சிற்றிலக்கியங்களையேனும் இலக்கணச் சுருக்க நூலையேனும் வல்லார் வாய்க் கேட்டுணராது செய்யுளியற்றப் புக்குத் தமிழ்த்தேவியார் திருமேனியில் வடுப்படப் புரிதல் பாவத்துக்கும் பழிப்புக்குமே இடமாதலை யினியேனு முணர்மின். தமிழ்ப்பாஷையினிடத்து ஆராய்ச்சி யில்லாத நீவிர் தமிழ்ப் பெரும்புலவரென்றும், வடமொழி வல்லுநரென்றும், வயித்திய நிபுணரென்றும், மாந்திரீகவலியாரென்றும், வாய்ப்பகட்டாகப் படாடோபஞ் செய்து தமிழினிடத்தும் யாசகரிடத்தும் அபிமானிகளான பலரை யடுத்துக் காலங்கழித்து வந்தனிர். அம்மட்டி லமையாது பிரமசூத்திரத் தமிழ்மொழி பெயர்ப்பாசிரியராகிய ஸ்ரீமத் விருதை சிவஞான யோகிகளையும், வடமொழிப் புணரியையும் தென்மொழிப் பரவையையும் நிலைகண்டுணர்ந்த வித்துவ சிகாமணியாகிய ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்களையும், மற்றும் பல புலவர் திலகர்களையும் பற்றிப் பலரிடம் குறை கூறித் திரிகின்றீராதல்பற்றி நுமது புலமைச் சிறுமையை நுமக்கு அளந்து காட்டி நும்மை நல்வழிப் படுத்தவேண்டுமென்னும் கருணையால் "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்னும் அருமைத் திருவாக்கின்படி நுமக்கு அறிவுறுத்தினோம். இம்மட்டிலேனும் பிறர்மீது தூஷணைத்திரப் பிரயோகஞ் செய்தலை யொழிமின். நுமக்கு மதிப்பு வேண்டுமாயின் "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும், மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர், சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து, யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்" என்னும் பெரியார் திருவாக்கின்படி நடமின். இலக்கிய இலக்கண நூல்களை நல்லாசிரியனை யடுத்துப் படித்துக்கொண்டு கவிபாடப் புகுமின்.

சுபம்! சுபம்!! சுபம்!!

இங்ஙனம்,

இராமசாமி பிள்ளை.

# தாவரங்கள் பரவும் விதம்.

---

இயற்கையின் மர்மங்களை நாம் உட்புகுந்து ஆராய்வோமானால், தாவரங்கள் தாம் க்ஷீணித்துப் போகாமலிருக்கவும், தம் சந்ததி அபிவிருத்தியாமாறும், ஏராளமாக வித்துக்களைத் தருவதும், அவ் வித்துக்களை அவை அதி சாமர்த்தியமாய்ப் பல கண்டங்களாகிய நானா இடங்களிலும் பரவச்செய்யச் செய்துவரும் பல்வித உபாயங்களும் புலப்படாமற் போகா.

தேச சஞ்சாரியும் உற்றுப்பார்க்கும் வழக்கத்தை இளமை தொட்டே அப்பியசித்தவருமான ஜான் ரே (John Ray) என்னும் ஆங்கிலப் பிரகிருத சாஸ்திரி ஒருவர்; ஒரு கசகசாச் செடி (Poppy)யில் முப்பத்தீராயிரம் வித்துக்களைத் தாம் கண்டதாகக் குறித்துள்ளார். லின்னியஸ் (Linneaus) என்பவர் தாம் புகையிலைச்செடி ஒன்றில் நாற்பதினாயிரம் வித்துக்களைப் பார்த்ததாகப் பகர்கின்றார். டாடார்ட் (Dodard) தாவர சாஸ்திரி எல்ம் (Elm) என்ற ஒருவகை வனவிருக்ஷத்தில் ஐந்நூற்றிருபத்தொன்பதினாயிரம் வித்துக்களைக் கணக்கிட்டதாகச் சாதிக்கின்றார்: பல்வகைப்பட்ட காளான்களும் பிரதி*யுற்பாதனம் (Reproduction) செய்யும் வகை அதி ஆச்சரியகரமானது. இவை எண்ணிறந்த வித்து அம்சங்களைப் பெற்றுள்ளவை. ரெற்றிகுலேரியா மாக்ஸிமா (Reticularia Maxima) என்ற காளான் விசேஷத்தில், ஊன்றிப் பார்க்கும் வழக்கத்திற் சிறந்த பிரகிருத சாஸ்திரி ஒருவர் 100 லக்ஷம் வித்துக்களைக் கணக்கிட்டிருக்கின்றார் என்றால் அதிகம் வளர்ப்பானேன்? இவற்றினும் அதிக வித்துக்கள் கொண்ட பூண்டுகளுமுண்டு. இவைகளை, இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நுட்ப தரிசனியாகிய எவ்வகைப் பூதக்கண்ணாடியாலும் கூடக் கண்டுணர்தல் அசாத்தியமானகாரியம். இவ்வினத்தின வித்து அம்சங்களைப் பூமி முழுதும் பரப்பி முளைக்கச் செய்தால் இருபத்துநான்குமணி நேரத்திற்குள் பூமி முழுதும் காளான் காடாகவே போய்விடுமாம்.

ஆகையால் செடிகள் தரும் விதைகள் முழுதும் முளைகண்டு உஜ்ஜீவித்தால் அவை இப்பூமி முழுதும் பரவி, பூமியை மனிதராதிய பிராணிகளின் வாசஸ்தலத்திற்கு யோக்கியமற்றதாக்கிவிடும். ஆனால் இயற்கையெனும் நற்றாய் அவை நம்மீது அவ்வாறு படையெடுத்

---

* உற்பாதனம்—பிறப்பித்தல்.

துத் துரத்தாதபடி வித்துக்களின் வீரத்தை அளவுபடுத்தியும், வெவ்வேறு வகையான செடிகள் முளைத்தற்கு வெவ்வேறு காலத்தை நியமித்தும் அவை தோன்றி உஜ்ஜீவிக்கும் நிலங்களையும், அந்நிலங்களின் சீதோஷ்ண நிலைமையையும் வேறு வேருகக் குறித்தும் இருக்கிருள். அன்றியும் வித்துக்களின் பெரும்பாகம் பிராணிகளின் ஆகாரமாகிவிடுகின்றன. இப்பெரும் பகைவர்களினின்றும் தப்பியோடக்கூடியவைகள் அதி சொற்பமே. இவை தம் குழந்தைகளுக்கு வேண்டிய வெப்பம் உணவு முதலியன தம்மிடம் போதிய அளவு கிடையா என்பதை நன்கறிந்து அவை தம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவது பிழைக்கும் பொருட்டுச் சில உபாயங்கள் செய்து வைக்கின்றன; எவ்வளவுக் கெவ்வளவு வித்துக்கள் தபக்கு இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு உபாயங்களையும் அவற்றைப் பரப்புகிற விஷயத்தில் தாய்ச்செடிகள் தேடிக் கொடுக்கின்றன. நிற்க,

மாம்பழத்தின் இனியசுவை, நிறம் முதலியனவும், நாயுருவியின் 'கொக்கி' போன்ற கதிரும், எருக்கு வித்தின் பஞ்சுபோன்றவாலும், 'டபாஸ்' காயின் வெடிப்பும், தேங்காயின் கவசமாகிய மிதக்கக்கூடிய மட்டையும், இன்னும் இவைபோன்ற பிறவும் வித்துக்கள் இடம்விட்டு இடம்சென்று பரவவென்றே இயற்கைத்தாய் செய்த உபாயங்களாகும்.

ஆயினும் மேற்கூறிய உபாயங்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் பட்சிகளின் மூலமாகவோ, மிருகங்கள் மூலமாகவோ, காற்று மூலமாகவோ, ஜலத்தினுதவியாலோ அல்லது மனிதர் மூலமாகவோ தான் நடந்தேற வேண்டியவைகளா யிருக்கின்றன. இவ்வாறின்றியும் சில காய்கனிகளின் வித்துக்கள் வெளியாகிச் சிதறி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுகின்றன. உதாரணமாக:—காசித்தும்பை, புளியாரை, டபாஸ் காய்கள் இவை வெடித்து உதிர்ந்து பரவுதலையும், வெள்ளரி, பீர்க்கு முதலியன சிதறிப் பரவுதலையும் காண்க. இனி பறவை, மிருகம், காற்று, நீர் முதலியவற்றின் மூலமாக எவ்வாறு தாவரங்கள் பரவுகின்றன என்பதைப்பற்றியும் இவற்றைப் பற்றிய பிற விஷயங்களையும் அடுத்த சஞ்சிகையில் விவரமாய்க் காட்டுவோம்.

வி. தியாகராஜையர்,
மதுரைக் காலேஜ்

# முத்ரா ராக்ஷஸம்.

(125-ம் பக்கத் தொடர்ச்சி.)

(கஞ்சுகி ப்ரவேசிக்கின்றான்.)

கஞ்சுகி:—"சாணக்யனுடைய தந்திரங்களால், எவ்வாறு நந்தன் நாசமடைந்து சந்திரகுப்தன் ராஜ்ய பதவியில் ஸ்தாபிக்கப்பட்டானோ, அது போல, எனது வயோதிகத்தால் என் காமம் முதலான விஷயப்பற்றுகளெல்லாம் ஒழிந்து, என்னிடத்தில் ஓர் தர்மபுத்தியானது ஸ்திரமாய்த் தோன்றியிருக்கின்றது. ஆனால்—(மலயகேதுவின்) வேலையில் புகுந்து ராக்ஷஸன், வர வர விருத்தாப்ய மடைந்து கொண்டிருக்கும் சந்திரகுப்தனை ஜயிக்க முயன்றும் எவ்வாறு வல்லமையற்றிருக்கின்றானோ, அங்ஙனமே ராஜ ஸேவையில் புகுந்த பேராசையானது, என் தர்ம புத்தியைக்கெடுக்க முயன்றும், அவ்வாறு செய்ய வலிமையற்றதா யிருக்கின்றது.

(திரும்பிச் சுற்றிவந்து)

இது தான் மந்திரி ராக்ஷஸனுடைய வீடு. ப்ரவேசிக்கின்றேன்.

(ப்ரவேசித்துப் பார்த்து விட்டு)

மங்களம்! தேவரீருக்கு மங்களம்!"

ராக்ஷஸன்:—"ஆர்ய! நமஸ்கரிக்கின்றேன்! ப்ரியம்வதக! ஓர் ஆஸனம் கொண்டுவா"

ஸேவகன்:—"இதோ ஆஸனம்! ஐயா! உட்காருங்கள்!"

கஞ்சுகி:—(உட்கார்ந்து) "தேவரீர் சரீரத்துக்குத் தக்க ஆபரணங்களை வெகுகாலமாய் அணிந்துக் கொள்ளாதது, தமக்கு அதிக மனவருத்த முண்டு பண்ணுகின்றதென்றும், நந்த மஹாராஜனுடைய உத்தமகுணங்களைத் திடீரென்று தேவரீர் மறப்பது கடினமாயினும், தம்முடைய விஞ்ஞாபனத்தையும் கொஞ்சம் அங்கீகரித்துக் கொள்ளவேண்டுமென்றும், இளவரசர் மலயகேது தேவரீரிடம் தெரிவித்துக் கொள்ளுகின்றார். (என்று சொல்லி ஆபரணங்களைக் காட்டி) ஆகையால், இளவரசர் தம் சரீரத்தினின்றும்

எடுத்தனுப்பிய இவ்வாபரணங்களைத் தேவரீர் அணிந்து கொள்ள வேண்டும்.''

ராக்ஷஸன்:—"ஆர்ய! ஜாஜலரே! யான் தெரிவித்துக்கொண்டதாக இளவரசரிடம் தெரிவிக்க வேண்டும். இளவரசரிடமுள்ள மிகுந்த அன்பால், நந்தன மஹாராஜனுடைய குணங்களை யான் மறந்து தான் வருகின்றேன். ஆயினும், பகைவரின் அவமானத் துக்குட்பட்டுக் கேவலமடைந்து பலமற்றிருக்கும் இவ்வரசரின் ராஜச்ரேஷ்ட பகைவரின் தைரியம் முழுமையையும் அழித்து சுவர்ணமயமான உன் ஸிம்மாஸனத்தை 'ஸுகாங்க' மென்னும் அரண்மைபில் ஸ்தாபிக்கும் வரை, யாதொருவிதமான ஆபரணங்களும் அணியமாட்டேன் என்று சொன்னதாக''

கஞ்சுகி:—"தேவரீர் போன்ற மந்திரியே சகல கார்யங்களையும் நிர்வகிக்குங்கால், இதைச்சாதிப்பது இளவரசருக்கு மிக்க சுளுவானதே! ஆகையால் இளவரசரின், முதல் பிரார்த்தனையைத் தேவரீர் அனுக்ரகிக்கவேண்டும்''

ராக்ஷஸன்:—"ஆர்ய! இளவரசரைப் போல தங்களது வார்த்தைகளும் உல்லங்கனம் செய்பத்தக்கவையல்ல. ஆகையால், இளவரசருடைய கட்டளைப்படியே நடக்கின்றேன்.''

கஞ்சுகி:—(ஆபரணங்களை அணியச் செய்வித்து) "தேவரீருக்கு மங்களம்! போய்வருகின்றேன்.''

ராக்ஷஸன்:—"ஆர்ய! நமஸ்கரிக்கின்றேன்.''

கஞ்சுகி போகின்றார்.

(இன்னும் வரும்).

R. வேதநாராயண சர்மா B. A., B. L.

# மாலினீ மாதவம்.

(74-ம் பக்கத்தொடர்ச்சி.)

---

உடனே ஸர்க்கார் வக்கீல் மறுபடி, தன் கேஸின் தன்மையையும், அதன் ஸாக்ஷ்ய அம்சங்களையும், அவைகளின் பலா பலன்களையும், சில முக்கியமான விவாத அம்சங்களுக்கு ஆட்சேப சமாதானங்களையும் சுருக்கமாயும் தெளிவாயும் எடுத்துக் கூறியபிறகு, கடைசியாக, "கனவான்களே! இக்கேஸில் கொலை செய்யப்பட்டவரின் ப்ரேதம் அகப்படவில்லையென்று எதிரிதரப்பில் மிகவும் வற்புறுத்திக்கூறலாம். ஆனல் ப்ரேதம் அகப்படாதது சட்டப்படி வாதிதரப்பில் யாதொரு பலக்குறைவுமில்லை. ஆனல், தினகரனுடைய தலைப்பாகை கிடைத்திருக்கின்றது. செய்கை தினம் முதல் தினகரனைக்காணேம். எதிரியின் அடிக்கத்தியொடிந்தது அகப்பட்டிருக்கின்றது. சிலநாட்களாய் எதிரிக்கும் இறந்தவனுக்கும், மாலினீ நிமித்தமாய்க் கொடிய பகையென்றும், செய்கை நேரத்துக்குச்சற்றுமுன், கொடுஞ்சண்டை நேர்ந்ததென்றும், சற்றுப் பின், எதிரி இரத்தக்கோலத்துடன் அரண்மனைக்குள் ப்ரவேசித்தானென்றும் ருஜுவாயிருக்கின்றன. இவ்வபூர்வ ஸம்பவங்களுக்கு எதிரிதரப்பில் யாதொரு ஸமாதானமும் சொல்ல முயலவில்லை. மேலும், எதிரிமீது என்றும் மாறாக் காதலையுடைய மாலினீ ஏன் இவ்விஷயத்தில் பொய் கூறவேண்டும்? தவிரவும், எதிரிதரப்பில் ஏராளமான பணச்செலவு செய்து எதிர்வாதம் செய்யும், ஜமீன்தாரவர்கள் ஏன் பொய் சொல்லவேண்டும்? இவ்வாறு ஸந்தர்ப்ப ஸாக்ஷ்யங்களெல்லாம் ஒன்று சேர்ந்து எதிரியின் குற்றத்தை நிரூபிக்கும் பொழுது கேவலம், ப்ரேதமகப்படாத ஒரு அம்சம் மாத்திரம், எதிரியைக் குற்றமற்றவனுய்ச் செய்யப் போதுமானதல்லவென்று தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது." என்று சொல்லிமுடித்தார்.

பிறகு கோமன்துரை தன்பக்கத்துப் பலாபலன்களைத் தெரிவித்துக் கொண்டபிறகு "கனவான்களே! எதிரியும், தினகரன் குடும்பமும், அன்யோன்யமாய் வாழ்ந்து வந்த விஷயமும் கேவலம்

காதல் மாத்திரம், இக்கொடுஞ் செய்கைக்கு எதிரியை யுட்படுத்த மாட்டாதென்பதும், செய்கைக்குமுன், மாலினியின் பிரார்த்தனைக்கு மாதவன் கூறிய விடையையும், துவாரபாலகர்களை நோக்கி, "ஜவான்களே! சின்ன ராசா உள்ளே வந்தாரா?" என்று கேட்ட கேள்விகளும் தாங்கள் சற்று நன்றாய்க்கவனிக்கவேண்டும். மேலும் மாதவன் தினகரனைக் கொலைசெய்தது வாஸ்தவ மாயின் துவார பாலகர்களை நோக்கி அவ்விதமாய்க் கேட்க யாதொரு காரணமுமில்லை. இந்தக்கேஸில், மாதவன் ஏதோ தன்குற்றத்தை யொப்புக்கொண்டதாக, ஜமீன்தார் சொன்ன சாக்ஷ்யமானது, அங்கீகரிக்கத்தக்கதுமன்று; திருப்தி கரமுமன்று. மாலினியின் காதல் விஷயத்தில், ஜமீன்தாருக்கு மாதவன் எதிரி. ஜமீன்தார் பணச்செலவு செய்வது கேவலம் உலகத்தை மெய்ப்பிக்கும் பொருட்டுத்தான் செய்து வருகின்றார். ஆகையால், அவர் ஸாக்ஷ்யத்துக்கு யாதொரு கௌரவமும் வைப்பது நியாயமுமல்ல. தவிரவும், ப்ரேதம் அகப்படாத விஷயமும், வாதிதரப்புக்கு மிக்க பலக்குறைவு தான். இந்த ஜில்லாவிலேயே முன் ஒருதடவை, மரணதண்டனையான பிறகு, கொலை செய்யப்பட்டதாக ருஜுப்படுத்தப்பட்டவன் (எல்லோரும் 'குல்' என்று சிரிக்கின்றார்கள்) உயிருடன் ஆஜரானான்' என்ற விஷயமும் இந்த ஜில்லா முழுமையும் தெரிந்தவிஷயமல்லவா? இதேமாதிரி தினகரன் எக்காரணம் பற்றியாவது மறைந்தாவது, மறைக்கப்பட்டாவது இருக்கலாம். அப்படி யேற்படும் விஷயத்தில் நிஷ்கல்மஷமான ஒருவன் கேவலம், ஸந்தர்ப்ப ஸாக்ஷ்ய பலத்தால் மாத்திரம் ஒருதரப்பு ந்யாயஸபையால் மரணதண்டனை யடைவது மிக்க துக்க கரமானது; இவைகளெல்லாம் ஆலோசிக்கும் விஷயத்தில் எதிரியை விடுதலை செய்வதே மிக்க ந்யாயம் என்றும் தர்மமென்றும் தெரிவிக்கப்படுகின்றது" என்று சொல்லிமுடித்தார்.

ஜட்ஜ்:—(பிறகு உபயதரப்பின் பலா பலங்களை எடுத்துக் கூறிய பிறகு) "கனவான்களே! இவ்விஷயத்தில் தாங்கள் மத்யஸ்தர்களா யிருப்பதில் முக்கியமாய் ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். விசாரணையில் விசாரிக்கப்பட்ட ஸாக்ஷ்யங்களை மாத்திரம் கொண்டு நாம் தீர்மானிக்கவேண்டும். இதைத்தவிர வேறு வெளி விஷயங்

# கீழைச்சிவப்பட்டித் தலபுராணப் பிழைகள்.

ஸ்ரீ வீமகவி யென்பவராற் பாடப்பட்டுச் சின்னாண்முன்னர் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்ட "கீழைச்சிவப்பட்டியென்று வழங்குகின்ற சிவநகர மான்மிய" த்தைப்பார்த்தேம். அதன்கண் சிறுமகாரும் எளிதினுணரத் தக்க சொற்பொருட்பிழைகள் மிகமலிந்துள்ளன. வெண்பாவைத் தளைப் பிழையின்றிப்பாட அறியாத இக்கவியார் காப்பியம் பாடுதற்குத் தகுதியற்றவரென்பது யாவருமுணர்வர். ஆயினும் இவரைச் சாபாநுக்கிரக சக்தி வாய்ந்தவரென்றும், பெரும் புலவரென்றுஞ் சிலர் மதித்திருந்தமையால் அம் மதிப்பே இவர்கல்வியின் சிறுமை கருதாது பெருநூல் செய்விக்க ஏதுவாகியிருக்கலாம். இனியேனும் இக்கவியார் முறையாகக் கற்றவரிலரென்பதுணர்ந்து இவர் தகுதிக்கேற்ற செயலை மேற்கொள்ளச் செய்வாரென்று கருதி மேற்கண்ட புராணத்துள்ள பிழைகளிற் சிலவற்றை யீண்டெழுதத் துணிந்தாம்.

ஈண்டு எழுதப்படும் பிழைகளால், வீமகவியார் ளகரத்துக்குரிய சந்தியிலக்கணமெல்லாம் ழகரத்துக்குமுள்ளவென்று மயங்கினரென்பதூஉம், காப்பியம் பாடுமரபுப்படி பொருட்கேற்றவாறு செய்யுட்களை முறைப்படுத்திவைக்கும் ஆற்றலில்லாதவரென்பதூஉம், ஒருமை பன்மைகளின் வேறுபாடும் அவ்வினை முற்றுக்களின் விகுதிகளுமுணராதவரென்பதூஉம், செய்யுளிற் கருதியபொருளை முரணின்றி முடித்துக்காட்டும் வன்மையிலரென்பதூஉம், தன், தம்சாரியைகளைப் பிரயோகஞ் செய்யுமிடனுணராதவரென்பதூஉம், ரகர றகர வேறுபாடறியாதவரென்பதூஉம், தன்வினை பிறவினைகளின் பேதமறியாதவரென்பதூஉம், தாமேற்கொண்ட கதையை முன்னோர் நூற்கும் யுக்திக்கும் பொருந்தக் கூறும் அறிவு சிறிதுமில்லாதவரென்பதூஉம், உம்மையை யொருபொருளுமின்றிப் பிரயோகித்திருக்கின்றனரென்பதூஉம், ளகர ழகர பேதமறியாதவரென்பதூஉம், பிறசாரியைகளைப் பிரயோகிக்கு முறையறியாதவரென்பதூஉம், இறைவனிடத்துச் செய்யும் வழிபாட்டு மரபறியாதவரென்பதூஉம், முன்னிலை யடர்க்கைகளை யொருங்குமுடிக்கு நெறியறியாதவரென்பதூஉம், வினையெச்சங்களை முடித்துக் காட்டும் வன்மையில்லாதவரென்பதூஉம், பஞ்சாக்கரம் விபூதி உருத்திராக்கங்களின் வரலாறு முதலியவற்றைக் கூறும் முதனூலாராய்ச்சியில்லாதவரென்பதூஉம், இலக்கண நூலாராய்ச்சி பொதுவகையானும் பெற்றிலரென்பதூஉம், காப்பியம்பாடும் ஆற்றல் சிறிதுமில்லாதவரென்பதூஉம் வெள்ளிடைமலைபோற் புலப்படும்.

இனி இத்தொகுப்புரையாற் பெறப்பட்ட பிழைகளை விளக்கமாகத் தருவேம்.

அவை வருமாறு:—

1. ஷை. தலபுராணம் பாயிரம் சோமசுந்தரக் கடவுள் வணக்கச் செய்யுளில் "மகிட்சி" யென்று ழகரவீற்று மொழியைச் சகார நோக்கி டகரமாகத் திரிதல் விகாரப்படுத்திப் பிரயோகஞ் செய்திருக்கின்றனர். இஃதொன்றோ! பாண்டித் திருநாட்டுப் படலம் 51வது செய்யுளில் "தவணீர்" எனவும், 33—34வது பக்கங்களில் "திருவாலவாய்ப் புகட்சி" எனவும், இந்திரன் சாபந்தீர்த்தபடலம் 13வது செய்யுளில் "மகிட்சிகூர்ந்து" எனவுங் கூறினர். ழகரவீற்றுச் சொன்முன் எவ்வெழுத்துவரினும் ளகாரவீறு போல் விகாரம் பெறுதற்கு விதி தொல்காப்பிய முதலிய நூல்களிலின்று. கிட்டிசை முதலிய சில மரூஉ வழக்கு நோக்கி வீர சோழிய நூலாசிரியர் அதனைத் தந்நூலில் விதியாக மேற்கொண்டு கூறினர். அதுவும் தகார முதன்மொழி வருமொழியாக வரும்பொழுது ழகரம் டகரமாகத் திரியுமென்றனரேயன்றி "மகிட்சி" 'தவணீர்' 'புகட்சி' யென இக்கவியார் கூறியாங்கு சகார நகார முதலிய பிறவெழுத்துக்கள் முதலாகவரினும் விகாரங் கூறிற்றிலர். இதனை, வீரசோழியம் சந்திப்படலம் கரு-வதுபாட்டிற் காண்க. அங்ஙனமாகவும் வீமகவியார் இங்ஙனம் விகாரப்படுத்தியதற்கேது ழகர ளகர பேதமுணராத இவரது விகாரவுணர்வேயாகும்.

2. ஷை பாண்டித் திருநாட்டுப்படலம் 1-வது செய்யுளில் மேகங்கள் கடலில் நீருண்டு கறுத்துவந்தனவென்றும் 2, 3-வது செய்யுட்களில் அவை பொதிகையில் மழைபொழிதல் இங்ஙனமிருந்ததென்றும் 4-வது செய்யுளில் பொதிகையில் மேகங்கள் மழைபொழிந்தனவென்றுங் கூறுகின்றார். 4-வது செய்யுட்பொருளை இரண்டாவது செய்யுளிலமைத்துப் பின் கிரமமாகக் கூறுதன் முறையாகும். என்னை: மேகங்கள் கடலினீருண்டு பொதிகையின் மழைபொழிந்தன, அஃதெங்ஙனமிருந்ததென்றால் இங்ஙனமிருந்தது என்று கூறுதலே பழையநூலாசிரியர் முறையாகலின் இதனுலிவர் ஒரு விஷயத்தைத் தொடர்ந்து பாடுஞ் சக்தியிலரென்பதும், முன்பின் வைப்பு முறையறிவின்றென்பதும் உணர்க.

3. பாண்டித் திருநாட்டுப்படலம் 5I-வது செய்யுளில் "கன்னியர் கவின்செய் கொங்கை, வளைதவணீரிற் றோன்ற மள்ளர்க ளதனை நோக்கி" யென்றார். ஈண்டுக் கொங்கைகளெனப் பன்மை விகுதிவிரித்துக் கோடலே பொருத்தமாகும். அதற்கேற்பப் பன்மைச்சுட்டுக் கூறுதலே முறையாகும்.

கன்னி யொருத்தி யெனினுங் கொங்கைகளிரண்டாமே. கன்னியரெனப் பன்மையாகக்கூறியவர், அதனை மறந்து "அதனை" யென ஒருமையாற் சுட்டியது ஒருமை பன்மைகளின் வேறுபாடறியாமையேயாகும்.

4. ஷை படலம் 54வது செய்யுளில் "பயிர்களெல்லாம்" என்று எழுவாயைப் பன்மையாகக் கூறி" நிறைந்தது" எனப்பயனிலையை யொருமையாக்கினர். இஃதொன்றோ! இந்திரன் சாபந்தீர்த்தபடலம் 38வது செய்யுளில் 'மாவினங்கள் மலர்ந்ததே" என்றார். இதனாலிவர் ஒருமை பன்மை வினைமுற்று விகுதிகளையுணராதவரென்பது வெளியாகின்றது. ஒருவாறீண்டுக் கூறியவையனைத்தும் பால் வழுவமைதி யென்பரேல் அஃது இயனூன் முறையறியாமையாகும். என்னை, ஆன்றோர் செய்யுட்களில் ஒரோவிடங்களில் இயனூல் வரையறையிகந்து காணப்படும் பிரயோகங்களுக்கு விதி கூறவேண்டிப் பொதுவாக விதிப்பின் யாவரு மேற்கொண்டு இயல்வரம் பழிப்பரென்று கருதி வழுவமைதியாக அமைத்துக்கொள்ளுமாறு சூத்திரஞ் செய்தாரியனூலாராகலின். இங்ஙனங் கோடலின்றியிவையிற்றை விதியாகக் கொள்ளின் ஒருமை பன்மை வினைவிகுதி முதலியவற்றை யியனூல் கூறியது பயனின்றாய் முடியும். இம்முறையியனூல் நன்கு பயின்றார்வாய்க்கேட்டுத்தெளிக. மேல் வருவனவற்றிற்கு மி..தொக்கும். அன்றியும் பன்மை விகுதிவந்தவிடத்தில் ஒருமை முடிபு ஆன்றோர் பிரயோகத்தில் யாங்ஙனங் காட்டுவர்?

5. ஷை சிவநகரப்படலம் 43வது செய்யுளில் இளைஞரெல்லாம் நன்னுதலாரது அமுதனிலைகண்டு கரணங்கள் செய்யும் வேசையர் தெருவைச்சொல்வாம் என்றார். இதன்கண் நன்னுதலார் யார்? வேசையர் யார்? இருவரும் ஒன்றாகவிருப்பின் இடையே நன்னுதலாரெனக் கூறவேண்டாவே? செய்யுமெனனும் எச்சம் எப்பெயரைக்கொண்டு முடிந்தது? இச்செய்யுளால் தாம கருதியபொருளைச் செய்யுளிற் செவ்வனே முடித்துக் காட்டும் வன்மையிவர்க்கின்றென்பதும், முடிவுப் பிறழ்ச்சியைத் தெரிந்துகொள்ளு மதுகையிலரென்பது முணர்க.

6. ஷை படலம் ஷை செய்யுளில், "நன்னுதலினார் தன்" என்று நுதலினார் என்னும் பன்மைச் சொல்லோடு அதற்கேற்ற தம் என்னுஞ்சாரியையைப்புணர்த்துக் கூறாது ஒருமைச் சொல்லோடு புணர்க்கப்படும் தன் என்னுஞ் சாரியையைப் புணர்த்தினார். ஆனால் இக்கவியாரிதனைத் தவறியேகதேசத்திற் பிரயோகித்துவிட்டனரோவெனின், அற்றன்று; ஷை படலம் 77வது செய்யுளில் "வேதியர் தன்மனை" யெனவும், தீர்த்த விசேடம் 10வது செய்யுளில் "போகங்கடன்னை" யெனவும், இந்திரன் சாபந்தீர்த்த

படலம் 4வது செய்யுளில் "வம்பர்தன்வம்சம்" எனவும், ஷை 19வது செய்யுளில் "எந்தன்" எனவும், ஷை 20வது செய்யுளில் "உந்தன்" எனவும், பரமன்பரிபவந்தீர்த்தபடலம் 11வது செய்யுளில் "எந்தன்" எனவும், 15வது செய்யுளில் "மேலவார்தனக்கு" எனவும், கொடிச்சிமனக்குறை தீர்த்தபடலம் 12வது செய்யுளில் "எந்தன்" எனவும், ஷை 29வது செய்யுளில் "பொன்னனையார்தனை" யெனவும், ஷை 37வது செய்யுளில் "உந்தன்" எனவும். ஷை 46வது செய்யுளில் "நிந்தன்" எனவும், "எந்தனை" யெனவும், திருநகரங்கண்டபடலம் 25வது செய்யுளில் "நாயகர் தன்னை" யெனவும், பார்ப்பினி கற்பைப்புரந்த படலம் 7-வது செய்யுளில் "வணிகர்தன்குலம்" எனவும் பலவிடத்தும் பன்மைச்சொல்லோடு தன்சாரியையைப் புணர்த்திருக்கின்றனரென்பதுணர்க. இதனால், இலக்கணவுணர்ச்சியும் சான்றோர் செய்யுட்பிரயோகங்களிற் பயிற்சியும் இவர்க்கின்மை தெற்றெனப்புலப்படும். இவற்றுள், "நிந்தன்" என்னும் பிரயோகம் அதிவியப்பைத் தருகின்றது. நீர் என்னுமுன்னிலைப் பன்மைச் சொல்லோடு வேற்றுமையுருபு புணரும்பொழுது நும் என்றாதல் வேண்டுமென்று விதியிருப்ப அதனையு மறந்து நிம் என்றுகொண்டு அதனோடு ஒருமைக்குரிய தன்சாரியையைப் புணர்த்தி யிருக்கின்றனர். இவரது சொற்பிரயோகவுணர்ச்சி பெரிதும் நகையாடற்பாலதொன்றாம்.

7. சிவாகரப்படலம் 55-வது செய்யுளில் "விருந்துண" வென ரகர வெதுகையாகக் கூறியவர், 2-வது அடியில் "நருந்தளவ" என்று கூறினர். இதன் கண் "நரு" என்பதற்குப் பொருள்யாது? "நரு" என்னுஞ் சொல்லொன்று யாண்டு மின்று. "நறு" என்னுஞ் சொல்லொன்றுண்டு. ரகர றகர பேதவுணர்ச்சி யிவர்க்கில்லாமையா லிங்ஙனமயங்கிக் கூறினர்

8. மூர்த்தி விசேடம் 2-வது செய்யுளில், "சந்திரன் றன்னைச் சூட்டுந் தன்மையால்" என்றார். சிவபிரான் சந்திரனைத்தானே சூடினனன்றிப் பிறர்க்குச் சூட்டினனில்லையே. அங்ஙனமாகவும் "சூட்டுந்தன்மையா லென்று பிறவினையாகப் பிரயோகஞ் செய்தலென்னையோ? இதனாலிவர் தன்வினை யின்னதென்றறியாதவரென்பதுணர்க. சோமன் என்னுஞ் சொற் பரமசிவனை யுணர்த்துங்கால் வடமொழி வியாகரணப்படி உமையோடு கூடினவன் என்னும் பொருளுடையதாகும். அங்ஙனமாகவும் இச்செய்யுளிலிவர் சந்திரனைச் சூடினதால் வந்த திங்நாமமென்ற தென்னையோ?

9. இந்திரன் சாபந்தீர்த்த படலம் 16-வது செய்யுளில், நகுடன் என்பான் வேள்வி பல செய்தமையாலிந்திரனாகி யரசு செய்து பன்னாட் சென்றபின் ஒரு தினத்தில் இந்திராணியைக் கொண்டுவரும்படி தூதரை விடுத்தான் என்றார். முனிவர் பலர் பல்லக்குச் சுமந்து செல்லும் பொழுது விரைவிலிந்திராணியைச் சாருதற்குரியவனாக விரும்பும் வழி நடத்தலாகிய அத்துணைச் சிறுகாலந்தாழ்த்தலையும் பொறுக்காது இந்திராணி போகவிருப்பத்தால் சர்ப்ப சர்ப்ப வென்று விரைவுப்படுத்திய நகுடன் "இன்னணம் பல நாட் செல்ல" என்றிவர் கூறியபடி இந்திரனாகியும் பன்னாளிந்நினைவைக் கொள்ளாதிருந்தானென்பது வியப்பே. திருவிளையாடற் புராணநூலாசிரியரும் தேவவரசு பெற்றவுடனே இந்திராணியாற் செல்லப் புறப்பட்டான் என்று கூறுதலறிக. இதனாலிவர் கூறுவதாக மேற்கொண்ட கதையைப் பொருத்தமாகக் கூறிமுடிக்குந் திறனில்லாதவரென்பதுணர்க.

10. ஷை படலம் 25-வது செய்யுளில் "சர்ப்பமுமாகென" என்றார் ஈண்டுச் சர்ப்பமும் என்பதிலுள்ள உம்மை எப்பொருளில் வந்தது? "எதிர் மறை சிறப்பைய மெச்சமுற்றளவை,தெரிநிலையாக்க மோடும்மை யெட்டே" என்று நன்னூற் சூத்திரத்திற் கூறிய பொருள்களிலொன்றனையும் இவ் வும்மை பயவாமையுணர்க. இதனாலிவர் உம்மை முதலியன பொருள் குறிப் பன வல்லவென்று மயங்கினமை வெளியாம்.

11. பரமன் பரிபவந் தீர்த்த படலம் 1-வது செய்யுளில் "பழகு நீங் குங் கதையைப் பகர்ந்தனம்" என்றார். ஈண்டு, பழகு என்னுஞ்சொற் குப் பொருள் யாது? பளகு என்னுஞ் சொல்லே குற்றமென்னும் பொரு ளையுணர்த்தும். இச்செயுளில் மற்ற மூன்றடியும் ழகர வெதுகை யுடையனவாம். ளகர ழகர வேறுபா டுணராமல் பழகு எனக் கூறினா ரெனக் கண்டு கொள்க.

12. கொடிச்சி மனக்குறை தீர்த்த படலம் 35-வது செய்யுளில் "இனிதினின்" என்று இன் சாரியையை ஓரிடத்து இரட்டித்துக் கூறுதற் கு விதியாண்டுக் கண்டனரோ? இஃதொன்றோ! ஷை படலம் 50-வது செய்யுளில் "பரிவினின்" என்று இன்சாரியையை இன்னுருபோடு சேர் த்துப் பிரயோகம் செய்திருக்கின்றனர். இதனாற் சாரியைகளைப் பிர யோகிக்கு முறையறியாதவரென்பதுணர்க.

13. திருநகரங் கண்டபடலம் 30-வது செய்யுளினீற்றில் இந்திரன் "மின்னவிர் மாலை யேந்தி விரைந்திடு விமான மூர்ந்தே" என்று கூறிய

வர், பின்னுள்ள செய்யுட்களில் பாகல் வனத்தினின்ற முதல்வனை நீரா ட்டி மாலை சூட்டிப் பிற உபசாரங்களுஞ் செய்து பூசித்தான் என்றார். விமானத்தினின்று நிலத்திலிறங்கிப் பூசித்தானென்றலே முறையாகும். அங்ஙனமின்றி விமானத்தை யூர்ந்து கொண்டே பரமசிவனை இந்திரன் பூசித்தற்கு விதி இவர்படித்த ஆகமங்களில் யாண்டுள்ளதோ? தேவராச னாதலின் நிலத்தினின்று பூசித்தல் அவன் பெருமைக்குக் குறைவுண்டா மென்று கருதி விமான மூர்ந்து பூசித்தானென்று கூறுதலே முறையெ ன்று கொண்டனர் போலும். அந்தோ! சிரமப்பட்டேனு மரியாதை கடவாது நடத்தவேண்டு மென்றிவர் மேற்கொண்ட கதைப்போக்குப் பெரு ம் போக்காக முடிந்தது. இந்திரன் உண்மையில் நிலத்தில் இறைவன் முன்னிலையில் மிகத் தாழ்ந்து நின்று பூசிக்குங் கடப்பாடுடையனாகவும், விமானமூர்ந்து பூசித்தான் என்று இல்லாத சிவாபராதத்தை யவன் மேலேற்றியமையா லவ்விந்திரனது பெருங்கோபத்திற்கு இக்கவியார் பாத்திரமாவரே யென்றஞ்சுகின்றாம்.

14. ஷை படலம் 42வது செய்யுளில் ஓரந்தணன் ஓரரசனைக்குசல விசாரணைசெய்ததாகக் கூறப்புகுந்தவர், "செழுமை சேர்புவியு மரசனுநீயு ந்தீதிலவோவெனக் கேட்டான்" என்றார். இதன்கண் அரசன்முன்னி லைப் பொருளாவன்; புவிபடர்க்கைப் பொருளாகும்; இவ்விரண்டனையும் ஒருங்குவினைமுடிபுசெய்ய வேண்டுமானால்" முன்னிலைகூடிய படர்க்கை யுமுன்னிலை, என்று நன்னூற் சூத்திரவிதிப்படி தீதிலிரோவென்றுமுன் னிலைப்பன்மை வினைமுற்றுக் கூறல் வேண்டும். இவ்விலக்கண முறை யறியாதவராதலின் இவர் தீதிலவோ என அஃறிணைப்படர்க்கை முற்றாகக் கூறினர்.

15. சந்திரனுக்குத்தாமரைமாலை கொடுத்தபடலம் 19வது செய்யு ளில், அச்சரிதங்கேட்டார்பெறும் பயன்களைக்கூறிவரும் பொழுது, "சந் ததமகப்பேர்கொள்வர்" என்றார். இதன்கண் மகப்பேறு என்பதை மகப் பேர் என்றார். வல்லின றகர வுகரவீற்றுச் சொல்லென்ப துணராமையின்.

16. பஞ்சாக்கர மகிமையுரைத்தபடலம் 36வது செய்யுளில் "விது வையுநேராய் விளம்பலா" மென்றார். இதன்கண்உள்ள ஆய் என்னும் வினை யெச்சம் எவ்வினைகொண்டது? விளம்பலாமென்னும் வினைகொண்ட தெனின், அதற்குக்கர்த்தாவேறு, ஆதலின், நேராவிளம்பலாமென்றலே முறையாகும். இங்ஙனம் இவ்வெச்சம் பலவிடத்து முடிபு பெறாமலுள் ளது. ஷை படலம் 40வது செய்யுளில் "இணையாய் ...வைப்பர்" என்று கூறியிருத்தலுமுணர்க.

17. பஞ்சாக்கர மகிமையுரைத்தபடலத்தில் ஆன்றோர் முறைப்படி பஞ்சாக்கரவகைகளையும், பொருள்களையு முறைகளையும் ஒரு சிறிதுங்கூறி ஞரில்லை. கதைமாத்திரங் கூறிமுடித்தனர். இங்ஙனமே விபூதி மகிமை யுரைத்தபடலத்தில் விபூதியின் வரலாறு, வகை ஆக்குமுறை முதலியவற் றையும் உருத்திராக்க மகிமையுரைத்த படலத்தில், அதன் வரலாறு, அணியுமுறைமை முதலிய வற்றையும் ஒரு சிறிதுங்கூறிஞரில்லை. இதனு லிவர்க்கு அவற்றின் மாட்சிகளை விரித்துக் கூறும் மூதுநூல்களினுராய்ச்சி யொரு சிறிதுமின்றென்பது வெளியாகின்றது.

இந்நூலில் இன்னும் பல பிழைகளுள்ளனவெனினும், அறிவுடைப் பெரியார் திருவாய்மலர்ந்தருளிய அருமருந்தன்ன நூல்களையாராய்வதற் குபயோகப்படுத்தும் எம் அருமைக்காலத்தின் ஒரு சிறு பகுதியையும் பய னின்றி இதன்கட் செலவிடத்துணிந்திலமாதலின், ஈண்டுக் கூறியன கொண்டு அறிவுடையார் உணர்ந்து கொள்வரென்று அப்பிழைகளை வரை யாது விடுத்தாம். இத்தகைய பிழைமலிந்துள்ள போலிநூல்கள் சில வெளிப்படுதலானே நம் அருமைச் செந்தமிழ்த் தெய்வத்தின் மாட்சியைப் பிறமொழியாளர் சிறிது குறை கூறத்துணிகின்றனர். இனியேனும் நந் தமிழ்த்தெய்வம் கசடறக் கல்லாதார் தீவாயினின்று வருந்தாது சீரிய நல்லறி ஞர் நாவினின்றும் விலகாமல் நலம் பெற்று வாழும்வண்ணம் அதன்முத லாசிரியரும், சொற்பொருட்டலைவருமாகிய உமாபதியார் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்,

1—9—912.
மகிபாலன்பட்டி

மு. கதிரேசச்செட்டி.

# ஆன்ம இலக்கணம்.

(108-வது பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு மலத்தால் பிணிப்புண்டு வருந்தும் ஆன்மாவிற்கு சிவபெருமான் இரங்கி குருடனுக்குக் கோல் கொடுப்பதுபோல் மாயையினின்றும் சரீரத்தைக் கொடுத்து இதாகிதமாகிய கன்மத்தையும் கூட்டிவைத்தபோது சகலாவத்தை எனப் பெயர் பெறும். மும்மலத்தாலும் அவத்தைப்படுதலின் சகலாவத்தை எனப் பெயராயிற்று.

மும்மலவாதனையும் நீங்கும்படியான் சாதனங்களில் உறைத்து நின்று சந்திக்கும் காலத்தும் பயனடைந் தின்புறுங்காலத்தும் சுத்தாவத்தை எனப் பெயர்பெறும். மலமாகிய அழுக்கு நீங்கப்பெறுதலால் சுத்தாவத்தை எனப் பெயராயிற்று.

இம்மூன்றவத்தையுள் கேவலாவத்தை பொதுவியல்பிற் பொதுவாம்.

சகலாவத்தையைப் பொருந்தி உபாதிகளோடு நிற்கும் காலத்தும் சுத்தாவத்தையிற் பொருந்தி உபாதிகள் நீங்கி நிற்கும் காலத்தும் உயிர் ஆறு தன்மையினைப் பொருந்தும். அவற்றுள் சகலத்தில் நான்கும் சுத்தத்தில் இரண்டுமாம். முன்னைய நான்கும் பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா என்பனவாம். பின்னைய இரண்டும் மந்திரான்மா, பரமான்மா என்பனவாம்.

இவற்றின் இலக்கணம் வருமாறு:—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களுடன் பொருந்தி ஏனைய தத்துவங்களைப் பின்னிட்டு நிற்கும் அவசரம் பூதான்மாவாகும்.

பிராணன், அபானன் என்னும் வாயுக்களுடன் கூடி சூக்குமை பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குக்களைப் பொருந்துங்கால் அந்தரான்மாவாகும். முப்பத்தாறு தத்துவங்களுடனும் கூடி சீவிக்கும் அவசரம் தத்துவான்மாவாகும்.

பூதம், வாக்கு, தத்துவம் மூன்றுடனும் கூடி சுக துக்கங்களை அனுபவிக்கும் அவசரம் ஜீவான்மாவாகும்.

பூத முதலாகக்கூறிய உபாதிகளினின்றும் விடுதலை யெய்தல் கருதி மந்திரமாகிய சாதனத்தோடு கூடும் அவதரம் மந்திரான்மா வாகும்.

யாவும் அறவே விடுதலை எய்த, பரனோடு கூடிநிற்கும் அவதரம் பரமான்மாவாகும்.

இவற்றுள் முன்னைய நான்கு தன்மையினைப் பொருந்திச் சீவிக்கும் சகலாவத்தை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமென ஐந்தவத்தை யுடையனவா யிருக்கும். அவற்றுள் ஞானேந்திரிய மைந்து, கர்மேந்திரியமைந்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, வாயு பத்து, அந்தக்கரண நான்கு, புருடன் ஒன்று, ஆக முப்பத்தைந்து தத்துவங்களுடன் லலாடத்தானத்தினின்று தொழிற்படு மவதரம் சாக்கிரம்.

சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, வாயு பத்து, அந்தக்கரண நான்கு, புருடன் ஒன்று, ஆக இருபத்தைந்து தத்துவங்களுடன் கண்டத்தானத்தினின்று தொழிற்படு மவதரம் சொப்பனம்.

பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று த்த்துவங்களுடன் இருதயத்தினின்று தொழிற்படு மவதரம் சுழுத்தி.

புருடன் பிராணன் என்னு மிரண்டுடன் கூடி நாபியினின்று தொழிற்படு மவதரம் துரியம்.

புருடதத்துவ மொன்றுடன் கூடி மூலாதாரத்தினின்று தொழிற்படு மவதரம் துரியாதீதம்.

இந்த அவத்தை யைந்துங் கீழாலவத்தை யென்று கூறப்படும். மேலாலவத்தை யைந்துண்டு. அது இருதயம், கண்டம், நாக்கினடி, புருவநடு, பிரமரந்தரம் என்னும் மேல்நோக்கிய ஐந்து தானங்களில் மந்திரம், மூர்த்தி முதலியவற்றோடு கூடிநின்று தொழிற்படுவதாம்.

மேற்கூறிய கீழாலவத்தை யைந்தும் பொருந்துவதாகிய நான்கு தன்மைகளும் பொதுவியல்பிற் சிறப்பெனப்படும்.

இவ்வாறு ஐந்தவத்தைப் படுங்கா லிதாகிதமாகிய இருவினைகளென்னும் ஆகாமியத்தைச் செய்து அது மாயையிற் கிடந்து பக்கு

வமாங்காறும் புண்ணிய பாவமெனப் பேர்பெற்று, இன்ப துன்பமாய் அனுபவிக்க வருங்கால் பிராரத்த மென்றாகி, அப்பிராரத்தம் இன்பமே யாயின் சொர்க்காதி லோகங்களையும் துன்பமேயாயின் நரகலோகத்தையும் இரண்டு மொத்ததாயின் மண்ணுலகத்தையும் பொருந்தி, அங்ஙன மனுபவிக்குங்கால் அவ்வனுபவம் வினைகாரணமாக இறைவன் செயலெனக் கருதாது தன் செயலெனக் கருது மகங்காரத்தால் மேலுமேலும் வினைகளை ஈட்டி தேவர் முதலா மெழுவகைப் பிறவிகளைப் பெற்றுப் பிறந்திறந்துழலும்.

இங்ஙன முழலு மான்மா அவற்றினின்றும் நீங்கி இன்பமடைய விரும்பி நூல் வழியாகத் தன் தன்மையையும், தன்னோடு அந்தரியாமியாயுள்ள இறைவன் றன்மையும், அவ்விறைவனைத் தனக்குத் தெரியவொட்டாது மறைத்துநிற்கும் பாசத்தின் றன்மையும் ஆராயவரும். வரவே பாசத்தினின்றும் நீங்கிப் பதியை யடைவதற்கு அங்ஙன மடைந்துள்ள ஒரு பெரியாரை ஆசிரியனாகப் பெற்றாலன்றி முடியாதெனத் தோன்றும். தோன்றவே தலையில் நெருப்புப்பற்றிய வொருவன் தண்ணீரையே யன்றிப் பிறிதொன்றையும் நாடாததுபோல் சரீர சம்பந்தமான ஒன்றிலும் விருப்பில்லாதவனாய்,

"உலகமு மாயையு மொண்கண் மாதரு
நிலையல வென்றுணர் நெடிய மாணவன்
கலையெலாந் தெரிந்தவன் கதி விருப்பினன்
நலமலி குரவனை நாடித் தேடுவான்" எனவும்,

"உலக நெருப்பைக் கடந்தொழியா ஞான வுததி மடுப்பேனோ
விலகு குடும்பத் துயர்நீங்கி யெந்நாட் டுறவி யாவேனோ
திலக மறையின் பொருளிதெனத் தேற்றுங் குரவற் காண்பேனோ
கலக வுடலப் பிணிதணந்து கடவு ளனையான் காண்பேனோ"

எனவும் அருளிய ஆன்றோர் திருவாக்கின்படி ஆசிரியனைத் தேடுவன். தேடவே வேண்டுவார் வேண்டுவதே ஈந்தருளும் வள்ளற்றன்மையுடைய பரம கருணாநிதியாகிய சிவபெருமான் விஞ்ஞானகலருக்கு அறிவுக்கறிவாய் உண்ணின்றும், பிரளயகலருக்கு நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறு முதலிய உறுப்புகளுடன் முத்தொழில் நடாத்திநின்ற தன் இயற்கை வடிவே குரு வடிவாக்க

காட்டி முன்னின்றும், சகலருக்கு அவர் வடிவுபோலும் வடிவுடைய் குருவாகி அவ்வடிவின் பின்னாக மறைந்து படர்க்கையினின்றும் தத்துவ ஞானத்தை அநுக்கிரகிக்கவேண்டுவது முறைமையாகலின் இதுகாறும் உண்ணின்றுணர்த்திய அப் பரம்பொருள் குருமூர்த்தியாய் எழுந்தருளிவரும். வரவே,

"தேனுண் டளிகள் பண்பாடுஞ் செறிகற் பகநேர் குருந்தடிக்கீழ்
மானு மழுவுஞ் சதுர்ப்புயமு மணிக்கந் தரமு மறைத்தருளி
யீன மகன்ற திருவாத வூரர்க் காக வெழுந்தருளு
ஞான முனியே யிவனென்று தெளிந்து நாவாற் பழிச்சினேனே"

என்ற திருவாக்கின்படி வத்துவன். வத்தவே இருவினையொப்பு மலபரிபாகமுஞ் சத்திநிபாதமும் நிறைந்த உத்தமத் தன்மையை நோக்கி வியந்து தத்துவங்களினின்று நீங்கித் தன்னையுந் தலைவனையும் தரிசிக்கும் ஞானோபதேசத்தைச் செய்தருளி அவ்வுபதேசத்தினுறைந்து நிற்காது பண்டைப்பயிற்சி வயத்தால் விடயத்தில் மீளுமாயின் அவ்விடயங்களை அசத்தென்று காணு முபாயத்தையும் உபதேசம். உபாயமாகிய அவ்விரண்டனையும் உணர்த்துவதாகிய ஸ்ரீ பஞ்சாக்கர ஜபத்தையு முபதேசித்தருளுவர்.

இவ்வா றுபதேசம் பெற்று சாதனத்தி னுறைத்து நிற்கும் போது மந்திரான்மாவாகும். இது ஆன்மாவிற்குச் சிறப்பியல்பிற் பொதுவெனப்படும்.

இனி மேற்கூறியவாறு சாதனத்தினுறைத்து நிற்றலால் அசத்தாயுள்ள பாசத்தினின்று மறவே விடுதலையெய்தி பெத்த நிலையில் சிவன் தோன்றாது தான்தோன்றி நின்றவாறுபோல இவ்விடத்தில் ஆன்மா வேறு காணப்படுமாறின்றி சிவனோ டொற்றுமைப்பட்டுத் தனக்கெனச் செயலின்றி அவனருளாலல்லது ஒன்றையும் செய்யானாய் இறைபணியில் நிற்பன்.

(இன்னும் வரும்)

பொ. மு. முத்தயபிள்ளை.

உ

சிவமயம்.

ஸ்ரீ ஞானசம்பந்தகுருப்யோநம:

அடியாரிடர் தீர்த்தருளு மானைமுகன் பாதங்
கடிமலர்தூய்க் கைதொழுவாங் கண்டு.

## கல்வி.

**முத்தமிழ்த் துறை மூழ்கிய வுத்தம கனவான்களே!**

இந்நிலவுலகத்தே நால்வகைச்சாதி எழுவகைத் தோற்றங்களிலே நமக்குக் கிடைத்துள்ள மனிதப்பிறவியோ எண்ணிறந்த புண்ணியஞ் செயினும் மெய்தற் பாலதன்று. இத்தகைய விழுமிய தேகம் பெற்ற நாமொவ்வொருவரும் தேடற்குரிய வற்றுளெல்லாம் தலையானது கல்வியே. அது கற்றல், அறிவு, வித்தை எனப் பொருள் தரும். இது, கல், என்னும் பகுதியும், வி என்னும் விகுதியும் பெற்றுள்ளது. இதில், கல் என்பது கிண்டல், தோண்டல், ஆராய்தல் என்னும் பொருளைப் பயக்கும் ஆகவே எத்தொழிலையும் ஆராயப்புகும்போது, குலக்கல்வி, இசைக்கல்வி, சித்திரக் கல்வி என ஒவ்வொரு தொழிலாராய்ச்சிக்கும் பெயர் கூறுவர். வடமொழியிலும் "வித்யா" என்னும் சொல்லும் மேற்கண்டவாறே பொருள் தருவதாய்க் கூறுகின்றார்கள். ஆகவே,

கல்வி கற்றாலன்றி, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் எவரும் அடைதற் கேதுவில்லை எனலாம். நாற் பொருளும் அடைதற் கேதுவாகிய ஞானசாத்திரங்களைக் கற்றற்குக் கருவிகளாயுள்ளவை நிகண்டு இலக்கியம் இலக்கணம் கணக்கு முதலியவைகளாகும். அவற்றைச் செய்தவர்களை "ஆக்கியோர்" கிரந்தகர்த்தாக்கள்" என்று சொல்லுவர். இவர்களில் ஆன்றோராக்கிய நூலுக்கு இலக்கியமெனப் பெயர். அவ்விலக்கியத்தினமைதியை விளக்குவதை இலக்கணமென்றுசொல்லுவர். இத்தகைய நூல்களைக் கற்பிப்பவரையே "குரு, ஆசாரியன், உபாத்தியாயன்" என்பர். "குரு" என்பதற்கு அஞ்ஞானத்தை நீக்குவோனென்பது பொருள். குருவின்பாற் சென்று கற்போரை "மாணவன்" "சிஷ்யன்" என்றும், கற்றலைப் படித்தல், சிட்சை என்றும் பல சொற்களாற் கூறுவர்.

**கல்வி கற்கும் முறை:**—பிரதமத்திற் கல்வி கற்பிப்பதற்கு முக்கியமாய்த் தேடிக்கொள்ளவேண்டிய பொருள் நல்லாசிரியனே. எப்படியெனில், "பிள்ளைக்குபாத்தியாயரும் பெண்ணுக்கு மாமியாரு"மென்பது பழமொழி. அதிலும் கல்விக்கேற்றகாலம் பால்யமாகுமெனலாம். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" பிள்ளைகட்கு இளமையிற் செய்யுஞ் சடங்குகளில் வித்யாரம்பமே முக்கியத்திலெல்லாம் முக்கியமாகும். இது பற்றியே, நமது ஒளவைப் பிராட்டியும் "இளமையிற்கல்" என்றும் "சிறிதிற் கற்றது சிலையிலெழுத்து" "இளமைப்பழக்கம் எப்போது மறவா." "தொட்டிற் பழக்கம் சுடுகாடள" வென்று ஏனையரும் கூறியுள்ளார். ஆகவே, கல்வி கற்றற்குரிய கால மிளமையே என்க.

இனி, நல்லாசிரியனிலக்கண மெப்படியிருக்கவேண்டு மெனில், உயர்குடிப் பிறப்பு, சீவகாருண்யம், கடவுள் வழிபாடு, பல நூற்பழக்கம், நூலின் பொருளைமாணாக்கரெளிதின் உணருமாறு சொல்லுந்திறம், உலக நடையை நன்கறிதல் முதலிய நற்குணங்கள் நிறையப் பெற்றிருத்தல் வேண்டும். குணமிலியின் பழக்கமே மாணவனுக்கு வருவதால் பிள்ளைகளை கல்விச்சனுப்பும் போதே தந்தையர்கள் ஆசிரியனை நன்குதெரிந்தனுப்ப வேண்டும். நம் நாட்டுத்திண்ணைப் பள்ளிக்கூடஉபாத்திமார்களோ தந்தையிருந்தவிடத்துத் தாமுமிருப்பதென்று பரம்பரைப்பாத்தியங் கொண்டவர்களாயிருக்கின்றார்களே யன்றி தெளியக் கற்றவர்களாயில்லை. இத்தகைய உவாத்தியாயரிடம் கற்கும் நாட்டுப்புறத்து மாணவர்களைக் காட்டிலும் ஒன்றுங்கல்லாத பட்டணவாசத்தையுடைய மாணவர்களை நூறுமடங்கு சிலாக்கியமாகச் சொல்லலாம். எவ்வாறெனின், பட்டணங்களின் காருண்யம் பொருந்திய நமது துரைத்தனத்தாரவர்கள் தக்க உபாத்திமார்களை ஏற்படுத்தி தருமத்திற்கென்றே கல்வி கற்பிப்பதால் அதில் படிக்கின்ற மாணவர்களோடு பழகும் படியாதவனும் நம நாட்டுத் திண்ணைப் படிப்பாளியினும் சிறக்கப் பேசக் காண்கின்றோம்.

ஆதலின் இதில் கவனிக்க வேண்டியது நல்லாசிரியனேயன்றோ? இதுற்பறியே ஆன்றோர் "எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்" என்றும் "கற்பித்தவன் கண்ணைக்கொடுத்தவ'னென்றம் உயர்வு கூறியுள்ளார்கள். இத்தகையவிலக்கணங்களையைப்பெற்றகுருவையடைந்த சிஷ்யன் அவரை எக்காலத்தும் விசுவாசத்துடன பயபக்தியோடு பணிந்துபாடம் கேட்கவேண்டும். இல்லையேல் அவன் குருததுரோகி யெனப் பலராலும் நிந்திக்கப்படுவான். தன்னை விசுவாசிக்கும் மாணவனை வஞ்சிக்கும் குருவுளனேல் அவன் முடத்தெங்கை யொத்துப் பலராலும் நிந்திக்கப்படுவான். ஆகவே இருவருக்கும் ஒருவர் பால் ஒருவருக்கு விசுவாசமிருந்தே தீரவேண்டு மென்பது கொள்ளக்கிடக்கின்றது. முககியமாய் உபாத்திமார் கவனிக்க வேண்டியன பலவுள. அவையாவன: இளம்பிள்ளைகளுக்கு இயற்கையாய் ஞானமில்லாததினாலும் கல்வி தொடங்குங்கால் துன்பமாய்ப் பின் இன்பம்பயக்குமாதலானும் பிள்ளைகளை சாம, பேத, தான, தண்டம் என்பவை களால் வசப்படுத்திக் கற்பிக்கவேண்டும். "கல்வியென்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழை வேண்டும்" என்பது பழமொழி. நல்லபிள்ளைகளிடம் "வித்யா சாலை விநோதச்சாலை" என்பது. போன்ற நன்மொழியானும் சீர்திருத்த வேண்டும். மேற்கூறிப் போந்தவற்றிற்கு எவனஞ்சிப் படியாது விடுகின்றானோ அவனை நாம் என்சொல்வது? (இததகையோனைக்குறித்து

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராங்
கல்லாத மூடர் கருத்தறியாரே. என்று திருமூலர் கூறியுள்ளார்.

(இன்னும்வரும்)

மு. ராம. சோமசுந்தரம் செட்டி,
கண்டனூர்.

# சமாசாரக்கோத்து.

## நாச்சியார்புரம் செந்தமிழ் வாசகசாலைக் கிருகப்பிரவேசமும் உபந்நியாசங்களும்.

கல்வி கேள்விகளில் தேர்ந்த பெரியோர்களின் பிரசங்கஙகள், பத்திரிகைகள், அங்கத்தவரின் வியாசங்கள், முதலியவற்றின் மூலமாக, செந்தமிழ், கல்வி, சைவசமயம், நல்லொழுக்கம், முதலியவற்றை விருத்திசெய்யும் நன்னோக்கத்துடன் இவ்வூரில் ஸ்ரீ சிவபெருமான் சந்நிதியில் 200 ஜனங்கள் இருக்கக்கூடிய ஓர் கட்டிடம் இவ்வூர் வணிகமணிகளால் அமைக்கப்பட்டது. அதற்கு ஆவணிமீ 15உ கிருகப்பிரவேசம் நன்கு நிறைவேறியது. அக்கட்டிடத்துக்கு "செந்தமிழ் வாசகசாலைக் கட்டிடம்" எனப் பெயரிட்டு ஓர் புத்தக நிலைப் பெட்டியையும், அவ்வூரார் நிறுவினார்கள். அம்மஹோத்ஸவ சம்பந்தமாய் அன்று மாலை 3மணிக்குக் கூடிய மகாசபையில் ஸ்ரீ சு. முத்து நாச்சியப்பச் செட்டியாரவர்கள் பிரேரேபணைப்படி வித்துவான்களும், நண்பர்களும் கூடிய அக்கூட்டத்தின் அக்கிராசனாதிபத்தியத்தை தஞ்சை கொள்ளுப்பேட்டைத் தமிழ் முனுஷி ஸ்ரீ கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள் ஏற்றனர். மாணச்சிறுவர் ஸ்ரீ நாராயணையர் "இந்திய மாதரின் சுதந்திர" த்தையும், வேலைச்சிவபுரி "ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை" ஆசிரியர் ஸ்ரீ சிங்காரவேலுப்பிள்ளையவர்கள் "தமிழ்க்கல்வி"யையும், அரியக்குடி ஸ்ரீ சக்கரவர்த்தி ஐயங்காரவர்கள் "வித்தையின்பய"னையும், மாணவச்சிறுவர் ஸ்ரீ பெரி. பெ. நா. நாச்சியப்பசெட்டியாரவர்கள் "தர்மம்" என்பதையும்பற்றி உபந்யசித்தார்கள். பிறகு அக்கிராசனர் மேற்கூறிய விஷயங்களையும் "சமய போதனை" என்பதைப்பற்றியும், நன்குபேசினர். பிறகு ஸ்ரீ சுப. ராம. நாச்சியப்பச்செட்டியாரவர்கள் இச்சபைத் தலைமையையும், ஸ்ரீ சு. முத்து. நாச்சியப்பச்செட்டியாரவர்கள். ஸ்ரீ பழ. கண. ராம. காசிவிசுவநாதச் செட்டியாரவர்களாகிய இருவரும், காரியதரிசி ஸ்வதானத்தையும், நிரந்தரமாக வகிக்கவேண்டுமென்று சபையோரால் கேட்டுக்கொள்ளப்பெற்று அவற்றை ஏற்றனர். பிறகு யாவருக்கும் ஸ்ரீ சு. முத்து. நாச்சியப்ப செட்டியாரவர்க ளாதியோரால் வந்தனம் சந்தன தாம்பூலாதி யளிக்கப்பட்டன.

அநந்தரம் கூறப்பெற்ற மங்களவாழ்த்துடன் சபை கலைந்தது. இச்சபையில் வித்துவான்களும், உபந்நியாசகர்களிற் சிலரும் கூறிய மங்கலவாழ்த்து வருமாறு:—

பிரமஸ்ரீ அரியச்குடி சக்கரவர்த்தி ஐயங்காரவர்கள் இயற்றியவை.

1. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

2. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீமத். வ. கரு. முத்தைய செட்டியாரவர்கள் இயற்றியது.

நன்றோங்கு நாச்சிநகர் நலமோங்கச் சன்மார்க்க ஞாலத் தோங்
குஞ், சென்றோங்கச் செங்கமலை வளமோங்க வெஞ்ஞான்றுஞ் செம்
பொற் றில்லை, மன்றோங்க வளர்பகவ னருளோங்கக் கவிஞர்புகழ்
வாணி சீர்த்தி, நின்றோங்க வணிகர்குழாஞ் செந்தமிழ்வா சகசாலை
நிறுவி னாரே.

ஸ்ரீமத். சிங்காரவேற்பிள்ளையவர்கள் இயற்றியவை.

பூமருவு மிந்திரகு பேரரெனப் புகழ்ந்துரைக்கும் பொருவி லாத
காமருவு நாச்சிநகர் தனின்மருவு வணிகரெலாங் கணக்கி லாத
தேமருவு கல்விகேள் விப்பொருளு முப்பொருளுந் தேட்ட மாகத்
தாமருவ நிறுவியவின் செந்தமிழ்வா சகசாலை தழைய வாழி.

ஆர்ந்த பரீதாபி யாண்டா வணிமாதந்
தேர்ந்த பதினைந்தாந் தெய்தியே—சார்ந்த
தாஞ்செந் தமிழ்வா சகசாலை நாச்சி
புரமதன் கண்ணிறுவும் போழ்து.

கண்டு மகிழ்ந்தோன்

**மதுரையில் சைவப்பிரசங்கங்கள்:**—23-8-12 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு மதுரைக் காலேஜில் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் நன்முயற்சியால் ஒரு சபை கூடிற்று. வித்துவான்களும் உபாத்தியாயர்களும் பிரமுகர்களும் மாணாக்கர்களும் ஆகப் பலர் கூடினார்கள். சபையார் விருப்பப்படி ஸ்ரீ மு. ரா, கந்தசாமிக் கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனச் சைவப்பிரசாரகர் ஸ்ரீ பொ. முத்தய பிள்ளையவர்கள் குருபக்தி என்னும் விஷயத்தை யாவரும் மகிழும்படி நன்றாக உபந்யசித்தார்கள். அதன் பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் உபந்யாச விஷயங்களை வியந்து பாராட்டிப் பேசியதுடன் குருபக்தியாற் சிறந்த ஏகலைவன் சரிதத்தையும் குருவை அவமதித்து இந்திரன் பட்ட துன்பங்களையும் எடுத்துக்கூறி முடித்தார்கள். உபந்யாச விஷயம் பிறிதொரு இடத்திற் காண்க.

27-8-12. மாலை 6—30க்கு மதுரை பிரஹ்மஞான சபையில் அச்சபையின் அங்கத்தினர்களும், மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதியவர்களும், வித்துவான்களுமாகப் பலர் கூடினர். திருவாவடுதுறை ஆதீனத்துச் சைவப் பிரசாரகர் ஸ்ரீ பொ. மு. முத்தயபிள்ளையவர்கள் சைவசமயம் என்னும் விஷயத்தைப்பற்றி யுபந்யசித்தனர். அதன் சுருக்கம் வருமாறு:—

"சைவசமயம் என்பதன் இருமொழிகளுள் முன்னது சிவபிரானையும் பின்னது உண்மையையும் குறிக்கும். உபலக்கணத்தால் முப்பொருளுண்மையைக் குறிப்பதுமாம். உண்மையென்பது பூர்வ பக்கஞ் செய்யப்படாது நிலைபெற்றிருத்தலாம். அது இருப்பு இலக்கணம் சாதனம் பயன் என நால்வகைப்படும். இத்தகைய சைவசமயம் வேதத்தைத் தழுவியது இதுபற்றியே "வைதிகசைவம் அழகிதந்தோ" என்றார் தாயுமானவர் வேதம் கர்மகாண்டம் ஞானகாண்டம் என இருதிறப் படும். கர்மகாண்டத்திற் கூறப்படும் புறமதப் பொருள்களை அங்கமாகவும் ஞானகாண்டத்திற் கூறப்படும் பொருள்களை அங்கியாகவும் கொண்டுள்ளது சைவசமயமாதலின் "இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி நீதியினா லிவையெல்லாம் ஓரிடத்தே காண நிற்பதியா தொருசமய மதுசமயம்" என்றருளிச் செய்தார் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள். முத்தியிலும் மும்முதலுண்டென்றதனால் ஆண்டும் மலமுண்டென்பது கருத்தன்று. இன்பம் விளைதற்கு ஹேது மலமின்மையே யென்பது கருத்தாம். ஏதுவை உண்டெனக் கூறல் கேட்டிற்கு மழை ஏதுவென்றல் போலும், மலம் நீங்கிய வழி கடல் நீரில் ஆற்றநீர்போல் ஆன்மா சிவத்துடன் கலந்து நிற்கும். இந்நிலை பிரித்துணரப்படாமையால் ஒன்றென்றும், ஆற்றுநீர் கடல்நீரைச் சாரும்வரை உள் பொருளாயிருந்து பின்னர் சுவறிவிடாமையால் இரண்டென்றும் கூறல் இழுக்காதாதலின் அத்துவிதமென்பது எங்கள் சைவசமயமேயாகும்" என்பதாம்.

முடிவில் தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதியவர்களும் பிரஹ்மஞானசங்கத்து அக்கிராசனாதிபதி ப்ரும்மஸ்ரீ ப. நாராயணையரவர்களும் உபந்யாசத்தை மிகவும் வியந்து பேசினார்கள்.

நல்லகுற்றாலம் பிள்ளை.

சேதுபதிஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர், மதுரை.